

ලලිත් ඇතුලත්මුදලි මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பிரிசில் நம்பிக்கை நிதியம்

Lalith Athulathmudali Mahapola Higher Education Scholarship Trust Fund

2022

වාර්ෂික වාර්තාව හා ගිණුම්

வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

ANNUAL REPORT & ACCOUNTS



Ministry of Trade, Commerce and Food Security

2022

ஆண்டறிக்கையும் கணக்குகளும்

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி
புலமைப்பிரிசில் நம்பிக்கை நிதியம்

உள்ளடக்கம்

நிதியத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்	1
அடிப்படைப் பெறுமதிகள்	2
கடந்த 05 வருட காலப்பகுதியில் அடையப்பட்ட வெற்றிகள்	3
மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்	4
பொறுப்பாளர் சபை - 2022	5
பணிப்பாளரின் அறிக்கை	6 - 8
செயற்பாட்டு மீளாய்வு	9 - 16
நிறுவனத்தின் நல்லாளுகை	17 - 19
மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஏனைய முதலீடுகள்	20 - 25
மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கருத்திட்டங்கள்	26 - 27
நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை	28 - 33
கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்	34 - 46
நிதிக் கூற்றுக்கள்	47 - 75

தூர நோக்கு

“வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட கற்றறிந்த சமூகமொன்றை உருவாக்குதல்.”

செயற்பணி

“குறைந்த சிறப்புரிமைகளைக் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு உயர்கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்துகொள்வதற்காக புலமைப் பரிசில்களை வழங்குதல் மற்றும் உயர் கல்விக்கான வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக சம வாய்ப்புகளை உருவாக்குதல்.”

குறிக்கோள்கள்

- இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்தல்.

- இரண்டாம் நிலைக் கல்வியை திருப்திகரமான முறையில் நிறைவு செய்து உதவி பெறுவதற்குத் தகுதியான இளைஞர் யுவதிகளுக்கு பல்கலைக்கழகம் அல்லது தொழில்நுட்ப அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் தமது கல்வி, தொழில்நுட்ப அல்லது தொழில்துறை கல்வியை நிறைவு செய்துகொள்வதற்காக உதவி வழங்குதல்.

- இளைஞர் யுவதிகளின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக தொழிற் பயிற்சி நிறுவனங்களை அமைத்தல் மற்றும் அவற்றின் முகாமைத்துவத்திற்கு உதவி புரிதல்.

- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள் மற்றும் நிறுவகங்களை அமைத்தல் மற்றும் அவற்றுக்கு உதவி புரிதல்.

- விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் நிபுணத்துவ அறிவை மேம்படுத்தல் மற்றும் விருத்தி செய்துகொள்வதற்காக உதவி வழங்குதல். (தற்போது உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக புலமைப் பரிசில்களை வழங்குவதானது முன்னுரிமையுடன்கூடிய பிரதான பணியாகக் கருதப்பட்டுள்ளது.)

அடிப்படைப் பெறுமதிகள்

நேர்மைத்திறன் (Integrity)

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசிலுக்காக மாணவர்களைத் தெரிவு செய்யும்போது நியாயமான முறையில் வெளிப்படைத்தன்மையுடன் பரிந்துரைக்கப்பட்ட முறையியலொன்றைப் பின்பற்றி தகைமை பெற்ற மாணவர்களுக்கு நியாயமான காலப் பகுதிக்குள் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில்களைச் செலுத்துவதற்கு நாம் நிதமும் முயற்சி செய்கின்றோம்.

நெகிழ்வுத் தன்மை (Flexibility)

நிதியத்தின் ஊழியர்கள் மற்றும் பணிப்பாளரை உள்ளிட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை நிதியத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய கருத்துக்களை தேடிச் சென்று போட்டி அடிப்படையிலான நிதிச் சந்தையில் வெற்றிகரமாக முன்னகர்கின்றது.

நேர்மறை மனப்பாங்கு (Positive Attitudes)

புலமைப்பரிசில்களை வழங்கும்போதும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் பணியாற்றும் போதும் நிதியை ஏற்பாடு செய்துகொள்ளும்போதும் பாரிய பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுவதுடன் அந்த அனைத்து சவால்களையும் மிகவும் சாதகமான வகையில் வெற்றிகொள்வதற்கான ஆர்வம் ஊழியர்களிடம் காணப்படுகின்றது.

குழு உணர்வு (Team Spirit)

மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தின் ஊழியர்கள் திறந்த மனப்பாங்கு, நட்புறவு மற்றும் தனிநபர் அபிவிருத்தி ஆகிய பண்புகளுடன் நிறுவனத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக ஒன்றிணைந்து செயற்படுகின்றனர்.

செயற்திறன் (Effectiveness)

தமது பணிகள் சம்பந்தமாக மஹபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்களிடையே சிறந்த புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கை காணப்படுவதுடன் அவர்கள் வழங்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்காக வினைத்திறனுடன் நிதமும் முயற்சி செய்கின்றனர். மிகவும் குறைந்தளவிலான ஊழியர்கள் ஊடாக (16 ஊழியர்கள்) மாதாந்தம் சுமார் 70,000 புலமைப்பரிசில்கள் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தனித்துவத்தை நோக்கிய போக்கு (Tendency towards uniqueness)

மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்கள் அதன் சேவையை உயர் தரத்தில் பேணுவதற்கு உறுதி பூண்டுள்ளனர்.

கடந்த 05 வருட காலப்பகுதியில் (2017 – 2022) அடையப்பட்ட வெற்றிகள்

- புலமைப் பரிசில் தவணையொன்றின் பெறுமதி 2,150/- ரூபா தொடக்கம் 2,550/- ரூபா வரை அதிகரிக்கப்படுதல். (திறைசேரியின் பங்களிப்பு 350/- ரூபா தொடக்கம் 2,450/- ரூபா வரை அதிகரிக்கப்பட்டது.)

- 2018 ஆம் ஆண்டு மஹபொல புலமைப் பரிசிலுக்காக தகைமை பெறும் வருமான எல்லையானது 300,000/= ரூபா தொடக்கம் 500,000/= ரூபா வரை அதிகரிக்கப்பட்டதோடு அதன் விளைவாக மேலதிக புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை சுமார் 4,000 ஆல் அதிகரித்தது.

- 2019 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்களைச் செலுத்துவதற்காக நேரடி வங்கி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் தற்போது நிலவும் கோவிட் 19 தொற்று நோய் நிலைமையின் மத்தியில் மாணவர்கள் இணையவழி மூலம் விரிவுரைகளில் பங்கேற்பதோடு நேரடி செலுத்தல் முறையின் கீழ் மாணவர்களின் கணக்குகளுக்கு மாதாந்தம் புலமைப் பரிசில் தவணைத் தொகை நேரடியாக வரவு வைக்கப்படுகின்றது.

- அனைத்து உயர் தொழில்நுட்ப நிறுவனங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் தவணைத் தொகையானது 2019 ஆம் ஆண்டில் 1,500/- முதல் 2,500/- ரூபா வரை 1,000/- ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டில் பல சவால்களுக்கு மத்தியில்கூட வருடாந்தம் வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை 1,000 இனால் அதிகரிக்க முடிந்தது. அதன்படி 2020/2021 கல்வியாண்டில் (2022) 16,000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2022 ஆம் ஆண்டில் நிதிச் சந்தையில் நிலவிய உறுதியற்ற தன்மையின் கீழ்கூட முறையான நிதி முகாமைத்துவத்தின் ஊடாகவும் செலவுக் கட்டுப்பாட்டின் ஊடாகவும் 12% ஆன தேறிய வருடாந்த வளர்ச்சியை அடைந்துகொள்ள முடிந்தது.

- மஹபொல நிதியத்தின் மூலதனக் சொத்துக்களை அதிகரித்து எதிர்வரும் 05 ஆண்டு காலப்பகுதியில் தற்போது வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை சுமார் 50% ஆல் அதிகரிக்க வேண்டும் என்பதால் நிதியத்தின் வருடாந்த வருமானத்தை சுமார் 2 பில்லியன்களால் அதிகரிக்க வேண்டியுள்ளது. இதற்காக முன்னாள் மஹபொல பெறுநர்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இணையவழி லொத்தர் மற்றும் பசுமைப் பல்கலைக்கழக கிராமம் உட்பட 03 பிரதான கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடிந்தது. இதனூடாக 2025 ஆம் ஆண்டளவில் நிதியத்தின் மூலதன சொத்துக்களை 25 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

1981 முதல் 2022 வரை மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள்

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு		விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்	காலம் (ஆண்டு)
1	வர்த்தகம் மற்றும் கப்பற்துறை	கௌரவ லலித் அத்துலத்முதலி	1981 - 1983
2	வர்த்தகம் மற்றும் கப்பற்துறை	கௌரவ லலித் அத்துலத்முதலி (தேசிய பாதுகாப்பு அமைச்சர்)	1984 - 1988
3	வர்த்தகம் மற்றும் கப்பற்துறை	கௌரவ லலித் அத்துலத்முதலி (விவசாயம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்)	1989-1990
4	வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு	கௌரவ ஏ.ஆர்.மன்சூர் - நம்பிக்கைப் பொறுப்பாளர், கௌரவ லலித் அத்துலத்முதலி (விவசாயம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்)	1991 -1992
5	வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு	கௌரவ ஏ.ஆர்.மன்சூர் - நம்பிக்கைப் பொறுப்பாளர், கௌரவ லலித் அத்துலத்முதலி (விவசாயம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்)	1993
6	வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு	கௌரவ ஏ.ஆர்.மன்சூர்	1994
7	உள்ளக மற்றும் சர்வதேச வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு	கௌரவ கிங்ஸ்லி ரீ.விக்கிரமரத்ன	1995 - 2000
8	உள்ளக மற்றும் சர்வதேச வர்த்தக மற்றும் வாணிப, கப்பற்துறை அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு	கௌரவ ரஊப் ஹகீம்	2001
9	வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு	கௌரவ ரவி கருணாநாயக்க	2002 - 2004
10	வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு	கௌரவ ஜெயராஜ் பெர்னாந்து புள்ளே	2004 மே - 2007
11	வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு	கௌரவ பந்துல குணவர்தன	2008 - 2009
12	கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சு	கௌரவ ஜோன்ஸ்டன் பெர்னாந்து	2010 - 2012
13	ஜனாதிபதி செயலகம்	சனாதிபதியின் செயலாளர்	2013 - 2014
14	உணவுப் பாதுகாப்பு அமைச்சு	கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா	2015
15	அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு	கௌரவ மலிக் சமரவிக்ரம	2015 நவம்பர - 2018
16	உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	கௌரவ கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ	2018 யூலை - செப்டெம்பர்
17	நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு	கௌரவ ரஊப் ஹகீம்	2018அக்டோபர் - 2019நவம்பர்
18	உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு	கௌரவ கலாநிதி பந்துல குணவர்தன	2019 நவம்பர - டிசெம்பர்
19	வர்த்தக அமைச்சு	கௌரவ கலாநிதி பந்துல குணவர்தன	2020ஜனவரி முதல் 2021 டிசெம்பர்
20	வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு	கௌரவ நலீன் பர்னாந்து	2022 ஜனவரி - இன்றுவரை

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை - 2022

	பொறுப்பாளர் / பொறுப்பாளர்கள்	அந்தஸ்து	பதவி
1.	கௌரவ ஜயந்த ஜயசூரிய	பிரதம நீதியரசர்	தலைவர்
2.	கௌரவ கலாநிதி பந்துல குணவர்தன (2021 – 2022 மே)	வர்த்தக அமைச்சர்	அமைச்சர் பொறுப்பாளர்
3.	கௌரவ நலீன் பர்னாந்து	வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு	அமைச்சர் பொறுப்பாளர்
4.	திருமதி.ஜெனி ஜயவர்தன பத்திரா எம் (2021 -2022 மே)	செயலாளர், வர்த்தக அமைச்சு	உத்தியோகபூர்வ பொறுப்பாளர்
5.	திரு.எஸ்.ரீ.கொடிகார (2022 யூன் - 2022 டிசம்பர்)	செயலாளர், வர்த்தக அமைச்சு	உத்தியோகபூர்வ பொறுப்பாளர்
6.	பேராசிரியர் கபில பெரேரா (2021 – 2022 மே)	செயலாளர், கல்வி அமைச்சு	உத்தியோகபூர்வ பொறுப்பாளர்
7.	திரு.எம்.என்.ரணசிங்க (2022 யூன் முதல் 2022 டிசெம்பர்)	செயலாளர், கல்வி அமைச்சு	உத்தியோகபூர்வ பொறுப்பாளர்
8.	திரு.எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேகர	நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்	நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்
9.	கலாநிதி.ரவீந்திரநாத் லியனகே (2021 – 2022 யூலை)	நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்	நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்
10.	திரு.வை.மதுரப்பெரும 2022 ஆகஸ்ட் - 2022 டிசெம்பர்)	நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்	நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளரின் அறிக்கை.



2022 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் ஒட்டுமொத்தமாக சரிவை எதிர்கொண்ட நிலையில், சந்தை வட்டி விகிதங்கள் விரைவாக அதிகரித்ததோடு நிதியமானது அதன் பலன்களைப் பெற்றதுடன் முதலீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய வங்கிப் பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் அனைத்து முதலீடுகளையும் முதலீடு செய்வதன் மூலம் வருடத்தில் சுமார் 01 பில்லியன் ரூபாவை வட்டி வருமானமாகவும் ஈட்டிக்கொண்டது. மஹபொல நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பாளர் சபையின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் செலவினங்களை விவேகமான முறையில் நிர்வகிப்பதன் மூலம், கிட்டத்தட்ட ரூ. 1.7 பில்லியன் மிகையை பதிவு செய்ய முடிந்தது. இதன்மூலம், மஹபொல நம்பிக்கை நிதியத்தில் 12% ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைய முடிந்தது.

புலமைப் பரிசில்களை வழங்குதல்

2022 ஆம் ஆண்டிலும், மாணவர்களுக்கு புலமைப்பரிசில் தவணைகளை தொடர்ந்து செலுத்த முடிந்ததோடு திறைசேரி நிதியை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, 2022 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தவணை செலுத்துவதில் சிறிது தாமதம் ஏற்பட்டது. இருப்பினும், நிதியத்தின் ஏற்பாடுகளை முற்பணமாக வழங்குவதன் மூலம் மாணவர்களின் கணக்குகளுக்கு நிதி விடுவிக்கப்படுவது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. 2020/2021 ஆம் கல்வி ஆண்டிற்குரிய புலமைப்பரிசில்களுக்கான தெரிவு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு நிலவும் சூழ்நிலை காரணமாக சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது. இருந்தபோதிலும், தெரிவு முடிவடைந்து மஹபொல நிதியத்துக்கு பெறப்பட்டதன் பின்னர் குறுகிய காலத்திற்குள் மாணவர்களின் கணக்குகளுக்கு புலமைப் பரிசில் தவணைகளை வரவு வைக்க எதிர்பார்க்கப்படுகிறது.

நிதியத்தின் மேம்பாட்டுக்காக புதிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

2022 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக நிலவிய பாதகமான பொருளாதார நிலைமை காரணமாக, மஹபொல நிதியத்தின் பணத்தைப் பயன்படுத்தி புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதும் நடைமுறைப்படுத்துவதும் பொருத்தமற்றது என்பதாலும் நிதியத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்படவிருந்த அனைத்து உத்தேசக் கருத்திட்டங்களும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதோடு மஹபொல நம்பிக்கை நிதியத்துக்கு செலவுச் சுமை ஏற்படாத மற்றும் வருமானம் ஈட்டக்கூடிய பின்வரும் கருத்திட்டங்களை மட்டும் நடைமுறைப்படுத்த மஹபொல நம்பிக்கை பொறுப்பாளர் சபை தீர்மானித்தது.

01. மஹபொல இணையவழி லொத்தரை (Online lottery) நடைமுறைப்படுத்துதல்

02. மஹபொல புலமைப்பரிசில் பெற்றவர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறுவதற்கான வேலைத்திட்டம்
03. மஹபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியை மீண்டும் ஆரம்பித்தல்

04. மஹபொல நம்பிக்கை நிதியத்திற்குச் சொந்தமான இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (SLIIT) இலாபத்தில் ஒரு சதவீதத்தை மஹபொல நம்பிக்கை நிதியத்திற்குப் பெற்றுக்கொள்ளல்.

தற்போது பொதுத் திறைசேரி எதிர்நோக்கியுள்ள நிதியை விடுவிப்பதிலான சிக்கல் காரணமாக 2023 ஆம் ஆண்டுக்காக வருடாந்த புலமைப்பரிசில்களைச் செலுத்துவதற்குத் தேவையான 1.5 பில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகளில் 400 மில்லியன் ரூபா மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு எஞ்சிய ரூ. 1.5 பில்லியன் மஹபொல நிதியத்தின் ஒதுக்கங்களிலிருந்து பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. மேற்கூறிய கருத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் அதன் ஒரு பகுதியை குறுகிய காலத்தில் தீர்க்க முடியும் என்பதோடு நிதியத்தின் நீண்ட கால வளர்ச்சிக்காக புதிய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

நிறுவன நல்லாளுகை

2022 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டபடி நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதோடு குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. நிதியத்திற்காக உள்ளக கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதோடு முறையாக உள்ளக கணக்காய்வுகளை மேற்கொண்டு 2022 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்தி நிதியத்தின் செயற்பாடு மற்றும் முதலீடுகள் தொடர்பாகவும் அதன் சொத்துக்களின் பாதுகாப்பு குறித்தும் ஒரு பின்தொடர்தல் மேற்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து தேவையான முடிவுகள் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளால் இது தொடர்பாக அளிக்கப்பட்ட ஆதரவை நன்றியுடன் நினைவுகூற விரும்புகிறேன்.

தேவைக்கேற்ப, 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலானது 2023 பிப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணகக்கீட்டு கொள்கைகளுக்கும் தரநியமங்களுக்கும் இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட்டு, அந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு அவதானிப்புகளுக்கும் பதில்கள் வழங்கப்பட்டன. மேலும், முதலீட்டுக் குழுவின் கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளதோடு அனைத்து முதலீடுகளும் முதலீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சொத்துக்களைப் பாதுகாத்தல்

மஹபொல நிதியத்திற்குச் சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

01. மஹபொல நிதியத்தின் அனைத்து முதலீடுகளையும் முதலீட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரில் மட்டுமே மேற்கொள்ளல் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் மட்டுமே முதலீடு செய்வதன் மூலம் அதிக நன்மைகளுடன் சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

02. நிதியத்தினால் புதிய கருத்திட்டங்களுக்காக, நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து 99 வருடகால குத்தகை அடிப்படையில் ஹொரணை மில்லேவ தோட்டத்திலிருந்து பெற்றுக்கொண்ட 123 ஏக்கர் காணியை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான பௌதீக ரீதியான உரிமையைப் பெறுவதற்குரிய காணி அளவீடு நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுவதால் தாமதம் ஏற்பட்டுள்ளது. 2023 ஜூன்

மாதத்திற்குள் கையகப்படுத்தல் செயல்முறை முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

03. நிதியத்திற்குச் சொந்தமான இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்தின் செயற்பாடுகளை முறைப்படுத்துவதற்கு பொறுப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டில் நிர்வாக நடவடிக்கைகளின் நெறிப்படுத்தல் செயற்பாடுகள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் அதன் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருவாயை ஈட்ட முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இறுதியாக, மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தைப் பலப்படுத்துவதற்கும், அதன் நல்லாளுகை மற்றும் செயற்பாட்டின் ஊடாக தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கும் ஒத்துழைப்பு வழங்கிய ஆரம்ப நம்பிக்கைப் பொறுப்பாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான அனைத்து அமைச்சர்கள், அலுவலர்கள் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பணியாட்டொகுதி அங்கத்தவர்கள், வர்த்தக அமைச்சினதும் ஏனைய உயர்கல்வி நிறுவகங்களினதும் அனைத்து அலவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மிகவும் சவால்மிக்க ஆண்டாகுமெனவும் அதனை முகாமைப்படுத்தி உயர் கல்விக்கான வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் குறைந்த வசதிகளைக் கொண்ட இளைஞர் யுவதிகளின் உயர் கல்வித் துறைக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் நிதியுதவி வழங்குவதற்கு முடியுமான மிகச் சிறந்த நிறுவனமொன்றாக லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிறுவகம் பரிணமிக்க வேண்டுமென மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

பராக்கிரம பண்டார,
பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர்
மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்.

செயற்பாட்டு மீளாய்வு

புலமைப் பரிசில்களை வழங்குதல்

புலமைப் பரிசில்களை வழங்குதல் பற்றிய தகவல்கள் (தவணையொன்றில் செலுத்தப்படும் தொகை)

புலமைப் பரிசில வகை	ஒரு புலமைப் பரிசிலுக்காக செலுத்தப்படும் தொகை (ரூ.)	ம.ந.பொ.நி . பங்களிப்பு (ரூ.)	திறைசேரியின் பங்களிப்பு (ரூ.)
சாதாரண புலமைப்பரிசில் செலுத்தல்	5,000/-	2,550/-	2,450/-
திறமை அடிப்படையிலான புலமைப்பரிசில் செலுத்தல்	5,050/-	2,600/-	2,450/-

புலமைப் பரிசில் அளிப்புகள் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்பு

மாணவர்களை இணைத்துக்கொள்ளல்	மாணவர்களின் எண்ணிக்கை
பல்கலைக்கழக மாணவர்கள் (அனைத்து கணக்கீட்டு ஆண்டுகளில்)	63,001
தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவன மாணவர்கள்	7,500
புலமைப் பரிசில் செலுத்துவதற்கான வருடாந்த செலவு	**ரூ. 1.8 பில்லியன்**

பொதுத் திறைசேரியின் பங்களிப்பு

மாணவர்களின் எண்ணிக்கை(அனைத்து கணக்கீட்டு ஆண்டுகளில்) தவணையொன்றுக்கான பெறுமதி (ரூபா) வருடமொன்றிலான தவணைகளின் எண்ணிக்கை திறைசேரிப் பங்களிப்பின் வருடாந்தப் பெறுமதி (ரூபா)	= 63,000 = 2,450.00 = 10 = 63,000 2,450 x 10 = 1,543,500,000

செயற்பாட்டு மீளாய்வு

மஹபொல புலமைப் பரிசில்களுக்கான தெரிவு 2020/2021)

தொடர் இல.	பாடநெறி	தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை			
			புதிய	பழைய	மொத்தம்
	உயிரியல் விஞ்ஞானம்	M	279	106	3,854
		O	2,511	958	
	பௌதீக விஞ்ஞானம்	M	268	39	3,062
		O	2,409	346	
	வணிகவியல்	M	281	16	2,969
		O	2,531	141	
	கலை/பொது	M	425	41	4,661
		O	3,800	373	
	பொறியியல் தொழில்நுட்பம்	M	78	6	843
		O	705	54	
	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	M	55	6	611
		O	499	51	
	மொத்தம்		13,863	2,137	16,000

மஹபொல புலமைப்பரிசில் வழங்கல் (ஏனைய நிறுவகங்கள்)

நிறுவகம்		மாணவர் எண்ணிக்கை
1.	இலங்கை சட்டக் கல்லூரி	25
2.	தேசிய தொழில்நுட்ப நிறுவகம், மொரட்டுவை	170
3.	பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்	26
4.	புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகம்	20
5.	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் (10 பட்டப் பாடநெறிகள், 14 டிப்ளோமா பாடநெறிகள்)	10
6.	இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE)	1,500
7.	இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (OUSL)	400
	மொத்தம்	**2,151**

செயற்பாட்டு மீளாய்வு


மொத்த பல்கலைக்கழக அனுமதிகள்=மற்றும் மஹபொல பெற்றுக்கொள்பவர்களுக்கிடையிலான ஒப்பீடு

ஆண்டு	**17/18**	**18/19**	**19/20**	**20/21**	**21/22**
பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	30,000	31,158	34,161	35,000	40,111
வருமான வரையறைக்கமைய(5 இலட்சம் ரூபாவிலும் குறைந்த) தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை	15,000	20,000	17,890	20,000	26,000
மஹபொல புலமைப் பரிசில் பெறுபவர்களின் எண்ணிக்கை	14,500	14,984	15,001	15,000	16,000
வருமான வரையறைக்கமைய தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களின்= எண்ணிக்கையானது மொத்த மாணவர்களின் சதவீதமாக	50%	64.1%	52%	57.1%	64.88%
மஹபொல புலமைப் பரிசிலைப் பெறுபவர்கள் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் சதவீதமாக	48%	48.%	44%	42.85%	39.88%
வருமான வரையறைக்கமைய தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்களிடையே மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள்	96%	75%	84%	75%	61.5%

செயற்பாட்டு மீளாய்வு


2022.12.31 ஆம் திகதியில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில்=நிதியத்தின் நிதி நிலைமை

மொத்த நிதித் தொகுப்பு



	ரூ.மி
பிரதான நிதியம்	12,421
NWSLமுதலீடு	985
SLIIT முதலீடு	12
மில்லேவ காணி	340
DLB முதலீடு	2
மொத்தம்	**13,760**


பிரதான நிதியம்




	ரூ.மி.
தி/உண்	6,209
தி/முறி	5,336
தொ.கடன்	375
ஏனைய	1
நி.வை	500
மொத்தம்	**2,421**

செயற்பாட்டு மீளாய்வு

முதலீட்டு வருமானம் - பிரதான நிதியம்



மொத்த வருமானம்



செயற்பாட்டு மீளாய்வு

செயற்பாட்டு மீளாய்வு - 2022

முதலீட்டு வருமான வகை	31.12.2022	31.12.2021	வேறுபாடு
திறைசேரி முறிகள்- (கூப்பன்)	726.7	676.6	7%
திறைசேரி உண்டியல்கள் - வட்டி	628.9	-	100%
தொகுதிக் கடன் வட்டி	110.8	161.2	-31%
தடுத்துவைத்தல் வரி இன்றி நிலை.வைப்புகள்	272.1	309.7	-12%
ஏனைய வருமானம்	33.2	9.7	242%
மொத்த முதலீட்டு வருமானம்	**1,771.7**	**1,157.2**	**53%**
நேரடிச் செலவுகள்			
பொறுப்பாளர் கட்டணங்கள் -BOC முதலீட்டுக் கணக்கு	(2.7)	(2.6)	4%
தேறிய முதலீட்டு வருமானம்	**1,769.0**	**1,154.6**	**53%**
ஏனைய வருமானம்			
DLB பங்கிலாபம்	1,381.8	1,230.0	12%
SLIIT வாடகை	25.0	25.0	0%
மொத்த ஏனைய வருமானம்	**1,406.8**	**1,255.0**	**12%**
மொத்த வருமானம்	**3,175.8**	**2,409.6**	**32%**
செலவுகள்			
புலமைப் பரிசில்செலுத்தல்கள்	(1,366.5)	(1,052.9)	30%
சம்பளம்	(16.9)	(15.8)	7%
தேய்மானம்	(31.0)	(31.3)	-1%
ஏனைய நிருவாகச் செலவுகள்	(15.3)	(17.4)	-12%
மொத்தச் செலவுகள்	**(1,429.7)**	**(1,117.4)**	**28%**
செலவுகளைக் கடந்த தேறிய வருமானம்	**1,746.1**	**1,292.2**	**35%**

செயற்பாட்டு மீளாய்வு

2022/23 வரவு செலவு மீளாய்வு

விபரம்	மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப் பட்ட வரவு செலவு	உண்மையான செலவு (அட்டுறு அடிப்படை)	வேறுபாடு	
	31.12.2022	31.12.2022	ரூபா.	%
வருமானம்				
பிரதான நிதியத்தின் வட்டி வருமானம்	1,100.0	1,771.8	671.8	61.07%
DLB பங்கிலாபம்	1,300.0	1,381.8	81.8	6.29%
SLIIT வாடகை	25.0	25.0	-	0.00%
மொத்த வருமானம்	**2,425.0**	**3,178.6**	**753.6**	**31.08%**
செலவுகள்				
மீண்டெழும் செலவுகள்	**1,765.5**	**1,401.0**	**(364.5)**	**-20.65%**
புலமைப்பரிசில் செலுத்தல்கள்	1,725.6	1,366.5	(359.1)	-20.81%
ஊழியர் வேதனம்	18.7	17.2	(1.5)	-8.07%
பராமரிப்புச் செலவுகள்=	2.8	4.0	1.2	42.86%
நிருவாகச் செலவுகள்	14.3	10.6	(3.7)	-25.87%
இதர மீண்டெழும் செலவுகள்	4.1	2.7	(1.4)	-34.15%
மூலதனச் செலவுகள்	**284.0**	**-**	**(284.0)**	**-100.00%**
அலுவலக இடமாற்றம்	3.0		(3.0)	-100.00%
தற்போதுள்ள முறைமையை அபிவிருத்தி செய்யதல்	5.0		(5.0)	-100.00%
இணையவழி கட்டண நுழைவாயில் முறைமை	1.0	-	(1.0)	-100.00%
உயிரியல் முறைமை தொழில்நுட்பம்-அம்பேவெல	25.0	-	(25.0)	-100.00%
மஹபொல பல்கலைக்கழக கிராமம்	50.0		(50.0)	-100.00%
வெளிநாட்டு மொழிகள் பல்கலைக்கழக கல்லூரி	100.0		(100.0)	-100.00%
மிஹிந்தலை மெகா சிட்டி கருத்திட்டம்	100.0		(100.0)	-100.00%
மொத்த செலவு	**2,049.5**	**1,401.0**	**(648.5)**	**-31.64%**
தேறிய மீதி	**375.5**	**1,777.6**	**105.1**	**28%**

செயற்பாட்டு மீளாய்வு

செயலாற்றுகை மதிப்பாய்வு - 2023 ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆறு மாதங்கள்

வருமானக் கூற்று	**2023** **ரூ.மி.**	**2022** **ரூ.மி.**
வருவாய்	2,091.10	1,589.23
நேரடி செலவுகள் (புலமைப் பரிசில் செலுத்தல்கள்)	(550.47)	(683.24)
	1,540.63	**906.00**
ஏனைய வருமானம்	0.33	0.24
மொத்த வருமானம்	**1,540.96**	**906.24**
நிர்வாகச் செலவுகள்	(30.45)	(32.90)
நிதிச் செலவு	(0.04)	(0.04)
மொத்தச் செலவுகள்	**(30.49)**	**(32.94)**
வரிக்கு முந்திய மிகை/ (பற்றாக்குறை)	**1,510.47**	**873.30**

நம்பிக்கை பொறுப்பாளர் சபை மற்றும் முதலீட்டு முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் - 2022

நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள் - 2022

நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்களில் நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் பெறுபேறுகள் அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட வரவு செலவுகள் உரிய நியமங்களுக்கு ஒப்பீடாக மிகவும் நுணுக்கமாக நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் அவதானிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன. இதன்போது நம்பிக்கை பொறுப்பாளர் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் கலந்துரையாடப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும். நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்களுக்கான அறிக்கைகள் அனைத்தும் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிபடுத்தப்படும். நம்பிக்கை பொறுப்பாளர் சபை 02 மாதங்களுக்கு ஒருமுறை கூடுவதோடு தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் விசேட சபைக் கூட்டங்களையும் நடத்துகின்றது. 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் நடத்தப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் அவற்றில் பங்கேற்ற பொறுப்பாளர் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	நம்பிக்கை பொறுப்பாளர் /நம்பிக்கை பொறுப்பாளர்கள்	பதவி	கூட்டத் திகதிகள் மற்றும் மாதங்கள்			
			22/2/9	22/3/8	22/8/4	22/11/1
			93	94	95	96
1	கௌரவ ஜயந்த ஜயசூரிய	பிரதம நீதியரசர்	*	*	*	*
2	கௌரவ கலாநிதி.பந்துல குணவர்தன	வர்த்தக அமைச்சர்	√	√	x	x
3	கௌரவ நலீன் பர்னாந்து	வர்த்தக அமைச்சர்	-	-	√	√
4	திருமதி.பத்ராணி ஜயவர்தன	செயலாளர், வர்த்தக அமைச்சு	√	*	x	x
5	திரு.எஸ்.ரீ.கொடிகார	செயலாளர், வர்த்தக அமைச்சு	-	-	√	√
6	பேராசிரியர் கபில பெரேரா	செயலாளர், உயர் கல்வி அமைச்சு	√	√	x	x
7	திரு.எம்.என்.ரணசிங்க	செயலாளர், உயர் கல்வி அமைச்சு	-	-	√	√
8	திரு.எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேகர	நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்	√	√	√	√
9	டாக்டர்.ரவீந்திரநாத் லியனகே	நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்	√	√	x	x
10	திரு.வை.மதுரப்பெரும	நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்	-	-	√	√

√ - நடத்தப்பட்ட மற்றும் பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை

x - பொறுப்பாளர் சபையிலிருந்து விலகியுள்ளார்

* - பங்கேற்கவில்லை

நிறுவனத்தின் நல்லாளுகை

முதலீட்டுக் குழுக் கூட்டங்கள் - 2022

2022 ஆம் ஆண்டில் நிதியத்தினால் நியமிக்கப்பட்ட முதலீட்டுக் குழுவினால் நடத்தப்பட்ட கூட்டங்கள் பற்றிய முன்னேற்றம் பின்வருமாறு.

	பெயர்	பணிப்பாளர் சபையில் பதவி	பதவிப் பெயர்	கூட்டத்திற்கான திகதி மற்றும் மாதம்	
				2022 06/03	2022 09/20
				10வது	11வது
1	திரு.எஸ்.ரீ.கொடிகார	உறுப்பினர்	செயலாளர், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு பதவிவழி நம்பிக்கைப் பொறுப்பாளர், MTF இன் பிரதான நிர்வாக அலுவலர்	-	√
2	திரு.மஞ்சுல டீ சில்வா	உறுப்பினர்	செயலாளர் நாயகம்/பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கை வர்த்தகச் சபை	√	√
3	திரு.எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேகர	உறுப்பினர்	நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்	√	√
4	திரு.கனக அமரசிங்க	உறுப்பினர்	இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர்	√	√
5	திரு.ரீ.தர்மராஜ் (FCA)	உறுப்பினர்	பணிப்பாளர் / தலைவர் NWSL / NWCL	√	√
6	திரு.எம்.பீ.பண்டார	உறுப்பினர்	பணிப்பாளர் / மஹபொல நம்பிக்கை நிதியம்	√	√

√ - நடத்தப்பட்ட மற்றும் பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை

x - பொறுப்பாளர் சபையிலிருந்து விலகியுள்ளார்

* - பங்கேற்கவில்லை

நிறுவனத்தின் நல்லாளுகை

பணியாட்டொகுதி - 2022 டிசம்பர் வரை பணியாட்டொகுதியின் விவரங்கள் பின்வருமாறு.

சேவை வகை	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிலவும் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேஷ்ட (பணிப்பாளர்,பி.நி.உ, உ.ப, உ.க.)	7	3	4
இரண்டாம் நிலை (நி.உ., மு.உ., போன்ற)	15	9	6
மூன்றாம் நிலை	2	2	-
ஆரம்ப நிலை	7	2	5
மொத்தம்	**31**	**16**	**15**

மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் ஆகக் குறைந்த பணியாட்தொகுதி செலவை மேற்கொள்ளும் நிறுவனமொன்றாக அதன் ஆரம்பம் முதலே மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பணியாட் தொகுதியொன்றின் ஊடாக அலுவல்களை மேற்கொள்வதுடன் பணியாட் தொகுதிக்கான நிர்வாகச் செலவானது வருமானத்தின் 0.62% ஆக இருந்ததுடன் செலவின் 1.9% எனும் மிகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடியுமாகியது.

பணியாட் தொகுதியில் தற்போது நிலவும் வெற்றிடங்களை உள்ளக ரீதியிலான பதவியுயர்வுகள் ஊடாக நிரப்புவதற்கும் அதன் பின்னர் ஏற்படும் பதவி வெற்றிடங்களை வெளிவாரியாக விண்ணப்பதாரிகளின் மூலம் நிரப்புவதற்கும் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டில் மஹபொல நிதியத்தின் பொறுப்பாளர் சபையின் விதப்புரையின் படி வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு ஒவ்வொரு சேவைத் தொகுதிக்கு அவசியமான ஊழியர் எண்ணிக்கை, பதவிகள் மற்றும் தகைமைகள் என்பவற்றைத் தீர்மானிப்பதற்காக ஆட்சேர்ப்புச் செயன்முறை மற்றும் நிறுவனக் கட்டமைப்புடன் ஊழியர் எண்ணிக்கை பற்றிய மீளாய்வினை மேற்கொள்வதற்காக குழு ஒன்றை நியமித்தது. குழுவின் அறிக்கையானது வருட இறுதியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

மஹபொல நிதியத்தின் பணியாட்தொகுதியின் அனைத்துப் பதவிகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென வர்த்தக அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான கோரிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2021.03.25 ஆம் திகதி அனுப்பப்பட்டதோடு நிதியத்தின் சுயாதீன இருப்பினை உறுதிப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் திறைசேரியினால் வெளியிடப்பட்ட பொது வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்படுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் ம.பு.ந.நிதியத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை (SOR) மஹபொல பொறுப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஏனைய முதலீடுகள்

அபிவிருத்தி லொத்தர் சபை

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் 2.2 மில்லியன் ரூபா நிதி அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த சபையின் பணிப்பாளர் சபைக்கு பதவிவழி அதிகாரத்தில் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் நியமிக்கப்படுவார்.

அபிவிருத்தி லொத்தர் சபையினால் ஈட்டப்படும் வருமானம் நேரடியாக ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்படுகின்றது. அதன் பின்னர் உரிய பங்கிலாபம் ஜனாதிபதி நிதியத்தினால் மஹபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்படுகின்றது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2018 - 2022 காலப்பகுதிக்கான இலாபம் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்கு அபிவிருத்தி லொத்தர் சபையினால் மாற்றப்பட்ட பங்கிலாபம்

விபரம்	2018 ரூ.மி.	2019 ரூ.மி.	2020 ரூ.மி.	2021 ரூ.மி.	2022 ரூ.மி.
அபிவிருத்தி லொத்தர் சபையின் தேறிய இலாபம்	**501.7**	**2,187.60**	**2,668.80**	**2,770.00**	**3,210.68**
மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்குச் சொந்தமான பங்கிலாபம் 50%	**250.9**	**1,093.80**	**1,334.40**	**1,385.00**	**1,381.77**
மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்பட்ட பகுதி	**25**	**780.6**	**922.3**	**1,153.30**	**1,381.77**
மேற்கொண்டும் கிடைக்க வேண்டிய இலாபப் பங்கு	313.2	412.1	231.7	424.8	266.80

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஏனைய முதலீடுகள்

நெஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிடட் (NWCL)

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் முழு உரிமையின் கீழுள்ள நெஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிடட் (NWCL) இல் 200 மில்லியன் ரூபா முதலீடு செய்து வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2003 மார்ச் 23 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது. நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட் முதலீட்டு முகாமையாளராக நடவடிக்கை மேற்கொள்வதுடன் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுப் பிரிவு குறைந்த ஆபத்தின் கீழ் உச்சளவு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் முகாமைத்துவ ஒப்பந்தமொன்றின் கீழ் வழங்கப்பட்டது. அவ்வாறு நெட்வெல்த் கோப்பரேஷன் கம்பனியினால் நிர்வகிக்கப்பட்ட மஹபொல நிதியம் 2019 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையில் காணப்படும் மஹபொல பிரதான கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் நெட்வெல்த் கோப்பரேஷன் லிமிடட் உடனான நிதிய முகாமைத்துவ ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் செயல்முனைப்பற்ற ஒரு கம்பனியாக காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டினை நோக்கும் போது நிதி நிலைமையானது பின்வருமாறு அமைந்தது.

2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை

	2022 (ரூ.மி.)	**2021 (ரூ.மி.)**
வருமானம்	1.95	0.93
செலவு	1.29	3.85
தேறிய இலபம்/ (நட்டம்)	**0.66**	**(2.92)**

2021=12.31Kஆம் திகதியில் நிதி நிலைமை

சொத்துக்கள்	**2022 (ரூ.மி.)**	**2021 (ரூ.மி.)**
காசும் காசுக்குச் சமமானவைகளும்	0.82	0.06
நிலையான வைப்புகள் மற்றும் குறுகிய கால வைப்புகள்	16.00	15.02
வைப்புகள், முன்கூட்டிய செலுத்தல்கள் ஏனைய வருமதிகள்	59.48	59.22
இணைந்த கம்பெனிகளின் முதலீடுகள் - NWSL	1,148.60	1,148.60
ஏனைய சொத்துக்கள்	34.70	35.20
மொத்த சொத்துக்கள்	**1,259.60**	**1,258.10**

உரிமையாண்மையும் பொறுப்புகளும்	**(ரூ.மி.)**	**2021 (ரூ.மி.)**
கூறப்பட்ட மூலதனம்	985.50	985.50
2022.12.31 இல் தடுத்துவைக்கப்பட்ட ஈட்டல்கள்	272.45	271.41
மொத்த உரிமையாண்மை	1,257.95	1,256.91
பொறுப்புகள்	1.65	1.19
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்	**1,259.60**	**1,258.10**

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஏனைய முதலீடுகள்

நெட்வெல்த் சிகியுரிட்டீஸ் கம்பனி (NWSL)

நெஷனல் வெல்த் கோப்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனம் ஒன்றாக நெட்வெல்த் சிகியுரிட்டீஸ் கம்பனி 2003 யூன் 23 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது. இக்கம்பெனி 2003 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இலங்கை மத்திய வங்கியின் ஆரம்ப நிலை வாடிக்கையாளராக செயற்பட்டதோடு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை கம்பெனி பெற்ற நட்டத்தின் காரணமாகவும் குறிப்பிட்ட கம்பெனியை பேணிச் செல்வதற்குத் தேவையான தொழிற்படு மூலதன பற்றாக்குறையின் அடிப்படையிலும் திறைசேரி முறி ஏல விற்பனையில் பங்கேற்பது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இம்முகாமைத்துவ பலவீனங்கள் காரணமாகவும் மிகவும் குறுகிய காலத்தில் பணிப்பாளர் சபைகள் மாற்றமடைந்ததன் காரணமாகவும் இலங்கை மத்திய வங்கியினால் NWSL கம்பெனியின் ஆரம்ப நிலை வாடிக்கையாளர் அனுமதிப்பத்திரம் 06 மாதங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அது 2020 மே மாதம் தொடக்கம் 2020 நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை அமுலில் இருந்ததன் காரணமாக நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு நேரடியாக தாக்கம் ஏற்படுத்தியதோடு அதன்மூலம் வருமான இழப்பும் ஏற்பட்டது.

2020.10.26 ஆம் திகதி நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு NWCL மற்றும் NWSL கம்பெனிகளை ஒழித்துக்கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 2021.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட ஒழித்துக்கட்டும் பணிகளின் முன்னேற்றம் பின்வருமாறு அமைகின்றது.

1. 2021 மார்ச் மாதம் அனைத்து ஊழியர்களினதும் சேவை முடிவுறுத்தப்பட்டதோடு உரிய நட்ட ஈட்டுத் தொகைகளும் பணிக்கொடைகளும் செலுத்தப்பட்டன.

2. செலுத்தப்பட வேண்டிய கடனாளர் மீதிகளுக்கு மத்தியில் காணப்பட்ட Trillian Securities கம்பெனியின் கடன்களை செலுத்தித் தீர்ப்பதற்காக இறுதி செலுத்தலாக 95 மில்லியன் ரூபா செலுத்தி கடன் தீர்க்கப்பட்டது.

3. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தவேண்டிய சகல வருமான வரிகளையும் வற் வரிகளையும் செலுத்துவதற்கான உடன்பாடு எட்டப்பட்டதோடு அனைத்து வரிகளின் மீதும் விதிக்கப்பட்ட தண்டத்தை அகற்றுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இணக்கம் தெரிவித்ததுடன் 2022 மார்ச் மாதம் நிலுவை வரிகளில் 304 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது. அத்துடன் எஞ்சிய 100 மில்லியன் ரூபாவை 12 தவணைகளில் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்கொண்டும் கடன் செலுத்தவேண்டிய கடன் உரிமையாளர்களுக்கு மத்தியில் Repo கடன் உரிமையாளரான வரச்சுவல் இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனிக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன் தொடர்பில் மீளாய்வாண்டில் இறுதி இணக்கப்பாட்டுக்கு வரப்பட்டது. அதன்படி உரிய கடனை செலுத்தித் தீர்ப்பது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் விதப்புரையின் படி உரிய கடன் வழங்குநருடன் கலந்துரையாடி இறுதி இணக்கப்பாட்டினை அடைந்ததோடு அதன்படி கடன் வழங்குநருடன் குழு நடத்திய கலந்துரையாடல்களுக்கு அமைவாக கடனை செலுத்தித் தீர்ப்பதற்காக உடன்பட்ட இறுதித் தொகை 325 மி.ரூபா என்பதோடு அதில் 250 மி.ரூபா செப்டெம்பர் மாதம் செலுத்தப்பட்டதோடு எஞ்சிய 75 மி.ரூபாவை 37.5 மி.ரூபா வீதம் இரண்டு தவணைகளில் செலுத்தி 2022 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி மொத்தம் பொறுப்பும் தீர்க்கப்பட்டது.

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஏனைய முதலீடுகள்

2022 ஆம் ஆண்டில் நிறுவனம் எந்த செயல்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என்பதோடு 2022 ஆம் ஆண்டில் முகாமைத்துவ ஒப்பந்தத்தின் அடிப்படையில் NWSL இன் முழு நிதியும் MTF க்கு மாற்றப்பட்டதுடன் MTF மற்றும் NWCL இடையேயான கொடுக்கல் வாங்கலைப் பதிவுசெய்ய கம்பெனிகளுக்கிடையிலான நடைமுறைக் கணக்கு பேணப்பட்டு வருகின்றது.

2022 ஆம் ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கலின் சுருக்கம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை

	2022 (ரூ.மி.)	**2021 (ரூ.மி.)**
வருமானம்	150.45	60.61
தீர்க்கப்படாத REPO மீதான வட்டிச் செலவு	289.73	40.84
செலவு	157.19	37.65
தேறிய இலாபம் (நட்டம்)	**(296.47)**	**(17.88)**

202212.31.ஆம் திகதியில் நிதி நிலைமை

சொத்துக்கள்	**2022 (ரூ.மி.)**	**2021 (ரூ.மி.)**
காசும் காசுக்குச் சமமானவைகளும்	0.62	45.86
நிலையான வைப்புகள் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள்	2.00	1,064.53
வைப்புகள்,=முன்கூட்டிய செலுத்தல்கள் ஏனைய வருமதிகள்	576.28	175.94
ஏனைய சொத்துக்கள்	0.07	0.13
மொத்த சொத்துக்கள்	**578.97**	**1,286.46**

உரிமையாண்மையும் பொறுப்புகளும்	**2022 (ரூ.மி.)**	**2021 (ரூ.மி.)**
கூறப்பட்ட மூலதனம்	1,175.00	1,175.00
விசேட இடர் ஒதுக்கம்	354.04	354.04
2022.12.31 இல் தடுத்துவைக்கப்பட்ட ஈட்டல்கள்	(1,019.30)	(717.78)
மொத்த உரிமையாண்மை	509.74	811.26
பொறுப்புகள்	69.23	475.20
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்	**578.97**	**1,286.46**

கொடுக்கல் வாங்கல் சுருக்கம்

கம்பனியின் /நிறுவனத்தின் பெயர்	தொடர்பு	கொடுக்கல் வாங்கலின் தன்மை	கொடுக்கல் வாங்கலின் பெறுமதி	இடமிருந்து/ (இற்கு) வரவேண்டிய தொகை
நெட்வெல்த் செக்யூரிட்டீஸ் லிமிடெட்	பொதுப் பணிப்பாளர்	NWSL இடமிருந்து நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல்	148,950	(148,950)
	பொதுப் பணிப்பாளர்	நிதி பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் NWSLஇடமிருந்து மஹபொல நிதியத்திற்குக் கிடைத்த நிதி	850,000,000	(850,000,000)
		முதலீட்டின் மூலமான வருமானம்	126,500,344	(126,500,344)
		திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தல்	593,798,500	(593,798,500)
		NWSL இற்கு நிதி மாற்றப்படுதல்	396,828,400	396,828,400
		நிலையான வைப்புகளில் முதலீடு செய்தல்	450,000,000	-
		நிலையான வைப்புகளின் காலமுதிர்ச்சி	450,000,000	-

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஏனைய முதலீடுகள்

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் (SLIIT)

2015 மே மாதம் 15 ஆம் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பொறுப்பாளர்களின் முறையான அங்கீகாரமின்றி ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதோடு அதுதொடர்பாக விசேட விசாரணையொன்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கையின்படி மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தின் சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி சாட்டப்பட்டுள்ளதால் SLIIT நிறுவனத்தின் நிர்வாகத்தை மீண்டும் மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தின் கீழ் கொண்டுவருவதற்கு COPE குழு தீர்மானித்துள்ளது. தற்போது SLIIT நிறுவனத்திடம் 20 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துக்கள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதோடு இதற்காக மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு மஹபொல நம்பிக்கை நிதியம் நடவடிக்கை எடுத்ததோடு அதற்கு SLIIT நிறுவனத்தின் தற்போதைய நிர்வாகத்தினர் தேவையான வசதிகளை வழங்குவதற்கு உடன்படவில்லை என்பதால் குறிப்பிட்ட சொத்துக்களை மதிப்பிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு அதன்மூலம் மஹபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கு கிடைக்கவேண்டிய அனுகூலங்கள் இழக்கப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி SLIIT நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் போலியானதும் முறையான அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டு SLIIT நிர்வாகக் கட்டமைப்பை 2015.05.12 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட வகையில் பேணிச் செல்ல வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. 2020 ஆம் ஆண்டில் SLIIT நிறுவனம் 500 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட இலாபத்தை ஈட்டியுள்ளதோடு அது மஹபொல புலமைப்பரிசில் நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய இலாபப் பங்காகும். இது குறைந்த வசதிகளைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கான உயர்கல்வி வாய்ப்பினை இழக்கச் செய்துள்ளதோடு இது தொடர்பில் அனைவரது கவனமும் செலுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
மேலும், மஹபொல நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பாளர் சபையின் முடிவின்படி, மஹபொல நிதியத்திற்கு SLIIT நிறுவனத்தின் இலாபப் பங்கினைப் பெற்றுக்கொள்வதற்கான சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்கள், அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் பிற தொடர்புடைய குழு பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்வதற்காக 2023 இல் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை நியமித்துள்ளார்.

(1) செயலாளர், வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு
(2) செயலாளர், கல்வி அமைச்சு
(3) சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து ஒரு உறுப்பினர்

SLIIT நிறுவனத்துடன் எட்டப்பட்ட ஒப்பந்தத்தை மீண்டும் ஆராய்வதற்காக அக்குழுவின் இறுதி அறிக்கை மஹபொல நம்பிக்கை நிதியத்தின் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான வர்த்தகம், வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படக்கூடிய வகையில் அது மஹபொல நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கருத்திட்டங்கள் (2022 – 2025)

புதிய கருத்திட்டங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	மூலதன முதலீடு ரூ.மி.	ஏதிர்பாரக்கப்பட்ட வருடாந்த வருமானம் ரூ.மி.
புலமைப் பரிசில் பெறுபவர்களின் தரவுத்தளம்	-	200
பாதுக்க மில்லே வத்த உத்தேச பல்கலைக்கழக கிராமம் (123 ஏக்கர்)	200	300
மஹபொலவிற்கான இணையவழி லொத்தர்	-	300

- **புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கான தரவுத்தளம்**

  புலமைப் பரிசில் பெற்று தற்போது கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறியுள்ள சுமார் 03 இலட்சம் மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு வேலைகள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். எனவே, இந்த புலமைப்பரிசில் பெற்றவர்களின் தரவுத்தளமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனைப் பயன்படுத்தி மஹபொல நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யுமாறு புலமைப் பரிசில் பெற்ற அனைவரிடமும் கோரிக்கை விடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக மக்கள் வங்கியிலிருந்து நேரடி வங்கி செலுத்தல் (இணையவழி செலுத்தல் நுளைவாயில் - Online Payment Gateway) வசதிகள் பெறப்பட்டுள்ளதுடன், மஹபொல என்ற பெயரில் Face book கணக்கொன்றையும் U Tube அலைவரிசையொன்றையும் ஆரம்பிக்க முன்மொழியப்பட்டுள்ளது. இத்துடன் பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தி நிதிய மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் நிதியத்திற்கு மேலதிகமாக சுமார் 500 மில்லியன் ரூபா நிதி பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

- **பல்கலைக்கழக கிராமம்**

  ஹோமாகம, பாதுக்கை பிரதேசத்தில் 123 ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேச பசுமை பல்கலைக்கழக கிராமம் ஒன்றைத் தாபிப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இது இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் முதலாம் கட்டத்தில் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், தொழில்நுட்ப அறிவினை வழங்குவதற்கான பயிற்சி நிலையம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் தாபிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக முதலீடு செய்யும் பொருட்டு ஆர்வத்திற்கான வெளிபாடுகள் (EOI) 2021 ஆம் ஆண்டு கோரப்பட்டதோடு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களைத் தாபிப்பது தொடர்பில் மூன்று தரப்பினர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதோடு மொத்த முதலீடு சுமார் 20 பில்லியன் ரூபாவாகும். இப்பணிக்காக தேவைப்படும் காணி (123 ஏக்கர்) நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து 99 வருடகால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதோடு அதற்காக செலுத்த வேண்டிய தொகையான 340 மில்லியன் ரூபா 2021 டிசம்பர் மாதமாகும்போது செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட உள்ளதோடு 2024 ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்களை இணைத்துக்

கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் சுமார் 10000 பேருக்கு கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட உள்ளதோடு இக்கருத்திட்டமானது இன்றளவில் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடிக்கும் தீர்வு கிடைக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மொத்த முதலீடு 200 மில்லியன் ரூபா என்பதோடு எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் 300 மில்லியன் ரூபா ஆகும்.

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

தலைவர்
மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள், சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நம்பிக்கைப் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைந்தொழுகாமை

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 07 ஆம் பந்திக்கு இணங்காமல், மிகக் குறுகிய காலத்தில் பணமாக மாற்றக்கூடிய குறுகிய கால முதலீட்டுப் பெறுமதியான 1,328,206 ரூபாவை, "காசும் காசுக்குச் சமமானவைகளும்" என்பதன் கீழ்

குறிப்பிடாமல் நீண்ட கால சொத்தாக "நிதிச் சொத்துக்கள்" என்பதன் கீழ் முன்வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், ஒரு சொத்தின் ஈற்றுப் பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட் காலம் ஆகியவை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன் எதிர்பார்ப்புகள் முந்தைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுமாயின், அது இலங்கைக் கணக்கீட்டு நியமம் 8 இன்படி கணக்கீட்டு மதிப்பீட்டின் மாற்றமாக கணக்குப் பதியப்பட வேண்டும். நிதியத்தின் தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணினிப் பாகங்கள் என்பவற்றுக்கான ஈற்றுப் பெறுமதியில் 2022 டிசம்பர் 31 இல் கழிந்த பெறுமதி ரூ. 14,232,124 மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16இன் 79(ஆ) பந்தியின் இன் படி, முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட மற்றும் இன்னும் பயன்பாட்டில் உள்ள மேற்படி சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்படும் தொகை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37இன் பந்தி 86 இன் படி, கடந்த வருடங்களில் நடைமுறையிலிருந்த மஹபொல இணையவழி லொத்தரை இரத்துச் செய்வது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நடுவர் செயன்முறை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நம்பிக்கை நிதியத்தின் தனி உரிமையைக் கொண்டுள்ள இரண்டு துணை நிறுவனங்களான நேஷனல் வெல்த் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் நாட்வெல்த் செக்யூரிட்டீஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் 2013 முதல் மீளாய்வாண்டு வரை தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் 1,328,206ரூபா "ஸ்வீப்பர் சேமிப்புக் கணக்குகளின்" மீதியை உறுதிப்படுத்துவதற்கான வங்கி நிலுவை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கை நிதியத்தின் தொடர்ந்தியங்குவதற்கான அதன் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது நிதியத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நம்பிக்கை நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்போது அது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கும் நோக்கம் இல்லாத போதிலும் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவனத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள்போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை தரப்புகள் விழிப்பூட்டப்பட்டன.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு எனது விசாரணையின் மூலம் காணப்படுகின்ற வகையில் உரிய நிதிசார் அறிக்கைகள் நிதியத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டதனுள் பின்வரும் கூற்றுக்களை முன்வைக்கும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் ஓர் அங்கத்தவருக்கு நிதியம் தொடர்புபட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வர்த்தக நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12((ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர சம்பந்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாத வகையில் செய்யப்பட்டுள்ளது என்பது.

சட்டங்கள், விதிகள் /ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு	**அவதானிப்பு**
(அ) 2014 பெப்ரவரி 17 ஆம் தேதியிட்ட பொது நிதிச் சுற்றறிக்கை 01/2014 இன் பந்திகள் 04(அ), (ஈ) மற்றும் (ஊ)	செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் நிறுவன அமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பணியாளர்களின் விவரங்கள், வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் ஆகியவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2016 டிசம்பர் 29 ஆம் தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 30/2016 இன் பந்தி 3.1	எரிபொருள் நுகர்வு 12 மாதங்களுக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோமீட்டர் தூரம் ஓடிய பின்னர் ஒவ்வொரு வாகனமும் மீண்டும் சோதிக்கப்பட வேண்டும்.ஆயினும் நிதியத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிதியத்தின் தத்துவங்கள், கருமங்கள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர நிதியத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுள்ள

வகையிலும் உரிய காலப்பகுதிகளில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

3. ஏனைய விடயங்கள்

(அ) பல்கலைக்கழகங்களில் பதிவு செய்துகொள்ளும் புலமைப்பரிசில் பெறத் தகுதியுடைய அனைத்து மாணவர்களுக்கும் மஹபொல புலமைப்பரிசில் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், பெற்றோரின் வருடாந்த வருமானம் 500,000 ரூபாவிற்கு குறைவாக இருக்க வேண்டும் என்ற அளவுகோல் காரணமாக 2020/2021 கல்வியாண்டில் மஹபொல புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்ற 26,000 மாணவர்களில் 16,000 மாணவர்களுக்கு மட்டும் அதாவது 61.5% வீதமானவர்களுக்கு மட்டுமே புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2022 மார்ச் 01 ஆம் முதல் 2023 பிப்ரவரி 28 வரை செல்லுபடியாகும் வகையில் கையொப்பமிடப்பட்ட 2022 மார்ச் 15 தேதியிடப்பட்ட 756 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு 4(உ) இன் படி, 25,000 ரூபாவுக்குக் குறைவான சிறிய பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் குத்தகைக்கு எடுப்பவரால் (நிதியம்) மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அனைத்து பெரியளவிலான மற்றும் கட்டமைப்பு ரீதியான பழுதுபார்ப்புகள் குத்தகைக்கு வழங்குபவர் மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கட்டிடத்திற்கு வண்ணம் தீட்ட 93,750 ரூபாவும் கட்டிடத்தின் உள்ளே விளக்கு பொருத்திகளை மாற்றுவதற்கு 69,000 ரூபாவும் நிதியம் செலவிட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலும் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்கிய 08 நடவடிக்கைகளின் இலக்குகளை அடைவதிலும் நடவடிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதிலும் நிதியம் தோல்வியடைந்திருந்தது.

(ஈ) பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய தடுத்து வைக்கப்பட்டிருந்த 3,832,875 ரூபாயானது 2013 ஆம் ஆண்டு முதல் இதுவரை 10 வருடங்களாக மாற்றமின்றி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டின் போதும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 31 ஆக இருந்தபோதிலும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உண்மையான பணியாளர் எண்ணிக்கை 16 ஆக இருந்ததால் 15 பணியிடங்கள் வெற்றிடமாக காணப்பட்டன. அந்த வெற்றிடங்களில் 04 சிரேஷ்ட நிலை பதவிகளும் 06 இரண்டாம் நிலை பதவிகளும் என்ற வகையில் காணப்பட்டதோடு அவை இரண்டு வருடங்களாக வெற்றிடமாகவே இருந்துள்ளன.

டப்ளியூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்களும் விளக்கங்களும்

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைந்தொழுகாமை

உரிய தரநியமத்துடன் அமைந்தொழுகாமை	புதிய அவதானிப்பா/ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 32 இன் படி ஒரு நிறுவனம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அல்லது வருமானம் மற்றும் செலவுகளை எதிரீடு செய்தலாகாது என்றபோதிலும், நிதியத்தின் நடைமுறை வங்கிக் கணக்கில் காணப்பட்ட ரூ. 159,325 மேலதிப் பற்று, நிதி நிலைக்கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்படாமல், நடைமுறைச் சொத்தாகிய ரூ. 64,200,000 பெறுமதியுடன்கூடிய "ஒருநாள் முதலீடு"நிலுவையுடன் சீர்செய்து தேறிய பெறுமதி நிதி நிலைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் "காசும் காசுக்குச் சமமானவை" என்பதில் குறிப்பிடப்பட்டிருந்தது.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்	மஹபொல நிதியத்தின் அறிவுறுத்தல்களின்படி, வங்கியானது தினத்தின் இறுதியில் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பதற்கு முன்னர் அன்றைய தினம் பணம் செலுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட காசோலைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டு மேலும் மீதமுள்ள நிலுவையை ஒரு குறுகியகால வைப்புத்தொகையாக (Overnight Deposit) வைத்துக்கொண்டு அதற்காக நிர்ணயிக்கப்பட்ட வட்டியை செலுத்துகின்றது. 2022.12.31 ஆம் திகதியில் மஹபொல நிதியத்தினால் வழங்கப்பட்ட போதிலும் செலுத்தல்களுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் நிலுவை ரூ. 159,325/-என்பதோடு வங்கியானது 2023.12.31 ஆம் திகதியில் இக்காசோலைகள் சமர்ப்பிக்கப்படாததால் மற்றும் ஒருநாள் வைப்பீடு மறுதினம் கணக்கில் வரவு	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைந்தொழுக வேண்டும்.	2023 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

			வைக்கப்படுவதால் மஹபொல நிதியத்தின் அறிவுறுத்தல்களின்படி, ஒரு நாள் வைப்புக்காக அனுப்பப்படுகின்றது. அதன்போது மஹபொல நிதியம் காசோலைகளுக்கு மீதியை ஒதுக்காமல், தினத்தின் இறுதியிலுள்ள வங்கி நிலுவையை வைப்புக்காக அனுப்புகின்றது. இது நடைமுறைச் சூழ்நிலை என்பதோடு நிதியத்தினால் கணக்கில் பணமின்றி காசோலைகள் விநியோகிக்கப்படுவதில்லை. இருப்பினும் இறுதிக் கணக்குகளில் மேலதிப் பற்று எனக் குறிப்பிடுவது பொருத்தமற்றது என்பதால், சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்குத் தொடர்புடைய மீதி ஒருநாள் வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு முதல், ஆண்டின் கடைசி நாளில் செலுத்தல்களுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மீதிக்கு இணையான தொகையை கணக்கில் வைத்து மீதமுள்ள நிலுவையை மட்டும் ஒரு நாள் வைப்புக்காக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.		
(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 07 ஆம் பந்திக்கு இணங்காமல், மிகக் குறுகிய காலத்தில் பணமாக	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இது ஒரு கணக்கீட்டுக்	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைந்தொழு	2023 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு

மாற்றக்கூடிய குறுகிய கால முதலீட்டுப் பெறுமதியான 1,328,206 ரூபாவை, "காசும் காசுக்குச் சமமானவைகளும்" என்பதன் கீழ் குறிப்பிடாமல் நீண்ட கால சொத்தாக "நிதிச் சொத்துக்கள்" என்பதன் கீழ் முன்வைக்கப்பட்டிருந்தது.			குறைபாடாகும். ஏதிர்வரும் கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	க வேண்டும்.	இணங்க நிதிக் கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
(இ)(i)இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், ஒரு சொத்தின் ஈற்றுப் பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட் காலம் ஆகியவை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன் எதிர்பார்ப்புகள் முந்தைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுமாயின், அது இலங்கைக் கணக்கீட்டு நியமம் 8 இன்படி கணக்கீட்டு மதிப்பீட்டின் மாற்றமாக கணக்குப் பதியப்பட வேண்டும். நிதியத்தின் தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணினிப் பாகங்கள் என்பவற்றுக்கான ஈற்றுப் பெறுமதியில் 2022 டிசம்பர் 31 இல் கழிந்த பெறுமதி ரூ. 14,232,124 மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் நிதியாண்டில், பதிவழிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ள அனைத்து சொத்துக்களும், தகுந்த மேற்பார்வைக் குழுவின் கீழ் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குப் பதியப்பட்டு, அதற்கேற்ப கணக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைந்தொழுக வேண்டும்.	சொத்துக்களின் மீள்மதிப்பீட்டை ஆளுகைச் சபையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ii)மேலும், இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16இன் 79(ஆ) பந்தியின் இன் படி, முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட மற்றும் இன்னும் பயன்பாட்டில் உள்ள நிதியத்துச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணினிப் பாகங்களின் முன்கொண்டு செல்லப்படும் தொகை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	உரிய வெளிப்படுத்தல் எதிர்வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைந்தொழுக வேண்டும்.	எதிர்வரும் கணக்கு ஆண்டுகளில் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க துல்லியமாக கணக்குகளை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஈ) மஹபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியம் சார்பாக 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இணையவழி லொத்தர் 2016 செப்டெம்பர் 15 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்ததோடு அது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நடுவர் செயன்முறை தொடர்பான விபரங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37இன் பந்தி 86 இன் படி, நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. உரிய வெளிப்படுத்தல் எதிர்வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.	கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.	எதிர்வரும் கணக்கு ஆண்டுகளில் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க துல்லியமாக கணக்குகளை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

1.4.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உரிய தரநியமத்துடன் அமைந்தொழுகாமை	புதிய அவதானிப்பா/ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
நம்பிக்கை நிதியத்தின் தனி உரிமையைக் கொண்டுள்ள இரண்டு துணை	ஏற்கனவே உள்ளது	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது	இந்த விடயம் கணக்காய்வுக் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன்,	ஒருங்கிணைந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டு	இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திடம்

நிறுவனங்களான நெஷனல் வெல்த் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் நாட்வெல்த் செக்யூரிட்டீஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் 2013 முதல் மீளாய்வாண்டு வரை தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		அவசியம்.	ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பாக இறுதிக் கருத்தைப் பெற்றுக்கொள்ள இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் அது ஆராயப்பட்டு வருகின்றது. மேற்படி கருத்து கிடைத்தவுடன் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதுடன், மேற்படி துணை நிறுவனங்களின் கணக்கு விபரங்களும் மஹபொல நிதியத்தின் வருடாந்த அறிக்கையில் முன்வைக்கப்படும். தற்போதைய நிலையில், கூறப்பட்ட துணை நிறுவனங்களின் முதலீட்டுப் பங்கு கணக்குகளில் முதலீடுகளாக மட்டுமே காட்டப்பட்டுள்ளது.	கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	கருத்துப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அக்கருத்து கிடைத்தவுடன், அதில் உள்ள பரிந்துரைகளின்படி எதிர்கால கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1.4.4 கணக்காய்வுக்காக எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை

விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்	புதிய அவதானிப்பா/ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
வங்கி மீதிகள்	1,328,206	2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஸ்வீப்பர் சேமிப்புக் கணக்கின் மீதியை உறுதிப்படுத்துவதற்	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	ஒரு நாள் முதலீடுகளுக்காகவும் சுவீப்பர் சேமிப்புக் கணக்கிற்காகவும் உறுதிப்படுத்தல்கள்	உரிய நிலுவை உறுதிப்படுத்தல்களை கணக்காய்வுக்குச்	2023 ஆம் ஆண்டு முதல், மாதாந்த வங்கிக் கூற்றுக்கள் மாதந்தோறும் பெறப்பட்டு, 2023 ஆம் ஆண்டு முதல்

		கான வங்கி உறுதிப்படுத்தல்கள்			(நிழற்பட பிரதி மூலம்) கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளது.	சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கணக்காய்வுக்கு மீதி உறுதிப்படுத்தல்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

1.5 கிடைக்க வேண்டிய(வருமதி) மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 கிடைக்க வேண்டிய (வருமதிக்) கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	புதிய அவதானிப்பா/ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் (CWE) கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பயன்படுத்தியமை காரணமாக நிதியத்தினால் சதொசவிற்கு வழங்கப்பட்ட ரூ 348,810 மீள் செலுத்தப்படும் வாடகை வைப்பீட்டை கட்டிடத்தை காலி செய்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர்கூட மீண்டும் அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்கனவே உள்ளது	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	348,810 ரூபாயை மீண்டும் அறவிடுவதற்கு அவ்வப்போது கடிதங்கள் மற்றும் அது தொடர்பான வங்கிக் கூற்றுக்களை அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், வைப்புத் தொகையை மஹபொல நிதியத்திற்கு வழங்க கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் நடவடிக்கை எடுக்கவில்லை.	கிடைக்க வேண்டிய கடன்களை உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.	நினைவூட்டல்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வைப்பீடு செய்யும் போது வழங்கப்பட்ட கட்டண பற்றுச் சீட்டை சமர்ப்பிக்குமாறு சதொச கோரியுள்ளது. அது தற்போது மஹபொல நிதியத்தில் இல்லாததால், பணம் செலுத்தும் உறுதிப்படுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

1.5.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	புதிய அவதானிப்பா/ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய தடுத்து வைக்கப்பட்டிருந்த 3,832,875 ரூபாயானது 2013 ஆம் ஆண்டு முதல் இதுவரை 10 வருடங்களாக மாற்றமின்றி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டின் போதும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்கனவே உள்ளது.	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	இந்த கொடுப்பனவுகள் தொடர்பான இறுதி பில்களை சமர்ப்பிக்காததாலும், தொடர்புடைய கருத்திட்டங்கள் முடிவடையாததாலும் இந்த கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.	செலுத்த வேண்டிய தொகையை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கொள்முதல் செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் காரணமாகவும் கடனாளிகளின் பில்களை சமர்ப்பிக்காததன் காரணமாகவும் இந்த கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியவில்லை. இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் CWE இன்ஜினியரிங் லிமிடெட் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதோடு இந்த கோப்புகள் தற்போது CWE இன்ஜினியரிங் நிறுவனத்தில் இல்லை என தெரிவிக்கப்பட்டதால், அதற்கான கொடுப்பனவுகள் தொடர்பான விவரங்களைப் பெற முடியாதுள்ளது.

1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நிர்வாக முடிவுகளுக்கு அமைந்தொழுகாமை

சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு	அமைந்தொழுகாமை	புதிய அவதானிப்பா/ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
(அ) நிதி ஒழுங்குவிதி 756	2023 ஏப்ரல் 25 ஆம் தேதி வரை கூட, 2022 ஆம் ஆண்டின் மீளாய்வு அறிக்கைகள்	புதிய	ஏற்கனவே உள்ள முறைமைக்கு அமைந்தொழு	பொருட் கணிப்பீட்டுக்கு ஒரு குழுவை நியமித்து, அதற்கான கணிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. குழுத்	நிதி ஒழுங்கவிதி களுக்கு அமைந்தொ	பொருட் கணிப்பீட்டு அறிக்கை 13.07.2023 ஆம்

	கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		க வேண்டும்.	தலைவரின் அறிக்கை கிடைத்ததும், கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	ழுகி செயற்பட வேண்டும்.	திகதி கிடைத்ததோடு கணக்காய்வு முடிவுறுத்தப்படும்போது இறுதி அறிக்கை கிடைத்திருக்கவில்லை.
(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆம் தேதியிட்ட பொது நிதிச் சுற்றறிக்கை 01/2014 இன் பந்திகள் 04(அ), (ஈ) மற்றும் (ஊ)	எரிபொருள் நுகர்வு 12 மாதங்களுக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோமீட்டர் தூரம் ஓடிய பின்னர் ஒவ்வொரு வாகனமும் மீண்டும் சோதிக்கப்பட வேண்டும்.ஆயினும் நிதியத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	கொள்முதல் திட்டம் மற்றும் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டிற்கான தொடர்புடைய செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கும்போது மேற்கூறிய அனைத்துத் திட்டங்களுடனும் ஒன்றாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.	2023 செயற்பாட்டுத் திட்டத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(ii) பந்தி 04 (பீ)	கருத்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.	புதிய	ஏற்கனவே உள்ள முறைமைக்கு அமைந்தொழுக வேண்டும்.	வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் மூலதனக் கருத்திட்டங்கள் ஆரம்ப கட்டத்தில் இருப்பதால், 2022 ஆம் ஆண்டிற்கான வருமானத்தை துல்லியமாகக் கண்டறிய முடியவில்லை. எதிர்காலத்தில், துல்லியமாக அடையாளம் காண முடியாத அனைத்து வருமானங்களும் வரவுசெலவுத் திட்டத்தில் சேர்க்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.	எதிர்காலத்தில் துல்லியமாக அடையாளம் காணப்படும் அனைத்து வருமானங்களும் வரவுசெலவுத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்படும்.
(ஆ) 2016 டிசம்பர் 29 ஆம் தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 30/2016 இன் பந்தி 3.1	எரிபொருள் நுகர்வு 12 மாதங்களுக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோமீட்டர் தூரம் ஓடிய பின்னர் ஒவ்வொரு வாகனமும் மீண்டும் சோதிக்கப்பட வேண்டும்.ஆயினும்	ஏற்கனவே உள்ளது	ஏற்கனவே உள்ள முறைமைக்கு அமைந்தொழுக வேண்டும்.	ஒதுக்க வாகனத்தின் எரிபொருள் நுகர்வு பற்றிய அனைத்து அறிக்கைகளும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்ட வாகனத்தின் எரிபொருள் நுகர்வு கணக்கிடப்படுவதில்லை	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.	2023 ஆம் ஆண்டின் எரிபொருள் நுகர்வு பற்றிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு

	நிதியத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.			என்பதோடு எரிபொருள் கொடுப்பனவு அதிகாரிக்கு மாதந்தோறும் வழங்கப்படுகிறது.		வழங்கப்படும்.

2. நிதிசார் மீளாய்வு

2.1 நிதிசார் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயல்பாட்டு விளைவு 1,746,616,255 ரூபா உபரியாக அமைந்திருந்ததோடு அதற்கு நேரொத்த முந்தைய ஆண்டில் தொடர்புடைய உபரி 1,292,729,814 ரூபாவாக அமைந்திருந்தது. அதன்படி நிதி பெறுபேறில் 453,886,441 ரூபா வளர்ச்சி காணப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் முதலீட்டு வருமானம் 614,495,964 ரூபா அதாவது 53% ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் தேசிய லொத்தர் சபையிடமிருந்து பெறப்பட்ட இலாபப் பங்கில் 151,768,390 ரூபா அதாவது 12.33% ஆல் அதிகரித்திருந்தமை காரணமாக அமைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	புதிய அவதானிப்பா /ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
(அ) 2022 மார்ச் 01 ஆம் முதல் 2023 பிப்ரவரி 28 வரை செல்லுபடியாகும் வகையில் கையொப்பமிடப்பட்ட 2022 மார்ச் 15 தேதியிடப்பட்ட 756 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு 4(உ) இன் படி, 25,000 ரூபாவுக்குக் குறைவான சிறிய பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் குத்தகைக்கு எடுப்பவரால் (நிதியம்) மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அனைத்து பெரியளவிலான மற்றும் கட்டமைப்பு ரீதியான பழுதுபார்ப்புகள் குத்தகைக்கு வழங்குபவர் மேற்கொள்ள	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்	ரூ. 93,500 ஆனது திருத்த நடவடிக்கைகளுக்காக செலவிடப்படவில்லை மாறாக புதிய நிதி அதிகாரி ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்தமையின் காரணமாக தேவையான இடத்தை விரிவுபடுத்துவதற்காக	குத்தகை ஒப்பந்தத்திற்கு இணங்க செயற்படுதல் வேண்டும்.	ஏதிர்வரும் கணக்கு ஆண்டுகளில் சரியான நடவடிக்கை எடுக்கப்படும்.

வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கட்டிடத்திற்கு வண்ணம் தீட்ட 93,750 ரூபாவும் கட்டிடத்தின் உள்ளே விளக்கு பொருத்திகளை மாற்றுவதற்கு 69,000 ரூபாவும் நிதியம் செலவிட்டிருந்தது.			மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்களுக்காக செலவிடப்பட்டது. அது ஒரு திருத்த நடவடிக்கை அல்ல. எனவே ரூ. 25,000 எல்லை தாக்கம் செலுத்த மாட்டாது.		
(ஆ)பல்கலைக்கழகங்களில் பதிவு செய்துகொள்ளும் புலமைப்பரிசில் பெறத் தகுதியுடைய அனைத்து மாணவர்களுக்கும் மஹபொல புலமைப்பரிசில் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், பெற்றோரின் வருடாந்த வருமானம் 500,000 ரூபாவிற்கு குறைவாக இருக்க வேண்டும் என்ற அளவுகோல் காரணமாக 2020/2021 கல்வியாண்டில் மஹபொல புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்ற 26,000 மாணவர்களில் 16,000 மாணவர்களுக்கு மட்டும் அதாவது 61.5% வீதமானவர்களுக்கு மட்டுமே புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	நிதியத்தின் தற்போதைய வருமானத்தின்படி, பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் அனைத்து மாணவர்களுக்கும் புலமைப்பரிசில்களை வழங்க முடியாது. ரூ. 2 பில்லியன் செலவில் ஆண்டுதோறும் 16,000 புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. எதிர்காலத்தில் நிதியத்தின் வருமானத்தில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்புடன், தற்போதுள்ள 16,000 இலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவிற்கு புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.	செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கீழ்க்கண்ட கருத்திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1. மஹபொல இணையவழி லொத்தர் (Online lottery) 2. மஹபொல பெற்ற முன்னாள் மாணவர்களின் தரவுத்தளம். 3. மில்லேவ வத்த பல்கலைக்கழக கிராமம் 4. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை மீள் வரைவு செய்தல் மற்றும் அதன் படி வருடத்திற்கான இலாபத்தில் ஒரு பகுதியை மஹபொல புலமைப்பரிசில்களை செலுத்துவதற்காக பெற்றுக்கொள்ளல்

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	புதிய அவதானிப்பா /ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
(அ) மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் கடைசி நாளிலும்கூட செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பின்வரும் 08 செயற்பாடுகளின் இலக்குகளை அடைய நிதியம் தவறியிருந்தது. (i) உதவித்தொகையின் பெறுமதியை ரூ.5,000 முதல் ரூ. 7,000 வரை அதிகரித்தல். (ii) உதவித்தொகை வழங்குவதற்கான குடும்பத்தின் ஆண்டு வருமான வரம்பை ரூ. 500,000 முதல் ரூ. 700,000 வரை உயர்த்துதல் (iii)ரூ.10,000 மதிப்புள்ள கடன் அட்டையை மாணவர்களுக்கு வழங்குதல்.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	எதிர்பார்த்த திட்டங்களை செயல்படுத்த தவறியதால், எதிர்பார்த்த வருமானம் கிடைக்காமல், செயற்பாட்டுத் திட்ட இலக்குகளை அடைய முடியவில்லை.	செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகள அடைய நடவடிக்க எடுக்க வேண்டும்.	2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிலவிய கோவிட் தொற்றுநோய் நிலைமையைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து, திறைசேரி வழங்கல் கட்டுப்பாடுகள் காரணமாக மஹபொல நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்ட திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டதால், இலக்கு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை. எதிர்காலத்தில் நிதி நிலைமை மேம்பட்டு அதன் விளைவாக வருவாய் அதிகரிக்கும்போது இது சாத்தியமாகும்.
(iv) மில்லேவ பல்கலைக்கழக கிராமத்தின் கருத்திட்ட அறிக்கை வரைவு மற்றும் முதலீட்டாளர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடைந்திருக்க வேண்டும் என்றபோதிலும், அது நிறைவேறவில்லை மற்றும் 2021 டிசெம்பர் 30 ஆம் திகதி 340,200,000 ரூபா செலவிட்டு 99 ஆண்டு குத்தகைக்கு பெறப்பட்ட காணியின் பௌதீக உடைமையை	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	இத்திட்டம் தொடர்பான காணிகளை அளவீடு செய்து அதன் உடைமையை ஒப்படைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தரப்பில் தொடர்ச்சியான காலதாமதம் ஏற்பட்டதால் திட்டமிட்டபடி கருத்திட்டத்தை ஆரம்பிக்க முடியவில்லை.	செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகள அடைய நடவடிக்க எடுக்க வேண்டும்.	திட்டமிட்டபடி கருத்திட்டத்தை ஆரம்பிக்க முடியாமற்போதல்

சாட்டிக்கொள்ளும் நடவடிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள நிதியம் தவறியிருந்தது.					
(v) மிஹிந்தலையில் பெரும் வணிக கருத்திட்டத்துக்கான காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நிதியம் தவறிவிட்டது.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்.	திட்டத்திற்கு உரிய காணி விடுவிக்கப்படாததாலும், அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படியும் கருத்திட்டத்தை கைவிட பொறுப்பாளர் சபை தீர்மானித்தல்	செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கருத்திட்டத்தைக் கைவிட நம்பிக்கை பொறுப்பாளர் சபை தீர்மானித்தல்
(vi) நுவரெலியா உயிரியல் முறைமை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக உரிய காணியை கையகப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய நிதியத்திற்கு முடிந்திருக்கவில்லை.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்	கருத்திட்டத்திற்காக உரிய காணி சாட்டப்படாமை மற்றும் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, கருத்திட்டத்தை கைவிட பொறுப்பாளர் சபை தீர்மானித்தல்	செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கருத்திட்டத்தைக் கைவிட நம்பிக்கை பொறுப்பாளர் சபை தீர்மானித்தல்
(vii) இணையவழி லொத்தரை மீண்டும் தொடங்குவதற்கான முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய நிதியம் தவறியிருத்தல்.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம்	கொள்முதல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பொருத்தமான முதலீட்டாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அந்த முதலீட்டாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக, இந்த விடயம் பொறுப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.	செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் புதிய இணையவழி லொத்தரை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.
(viii) வெளிநாட்டு மொழிகள் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவையின் உரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய நிதியம் தவறியிருந்தது.	புதிய	தற்போதுள்ள முறைமையை மேம்படுத்துவது அவசியம் .	அரசாங்கத்தின் கொள்கையின்படி புதிய முதலீடுகளை மேற்கொள்ளலாகாதென்ற அறிவித்தலின்படி கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது.	செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கருத்திட்டத்தை இடைநிறுத்த நம்பிக்கை பொறுப்பாளர் சபை தீர்மானித்தல்.

3.3 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	புதிய அவதானிப்பா /ஏற்கனவே உள்ள அவதானிப்பா	கட்டுப்பாட்டு ஆபத்து வெளிப்படுத்தல	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 31 ஆக இருந்தபோதிலும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உண்மையான பணியாளர் எண்ணிக்கை 16 ஆக இருந்ததால் 15 பணியிடங்கள் வெற்றிடமாக காணப்பட்டன. அந்த வெற்றிடங்களில் 04 சிரேஷ்ட நிலை பதவிகளும் 06 இரண்டாம் நிலை பதவிகளும் என்ற வகையில் காணப்பட்டதோடு அவை இரண்டு வருடங்களாக வெற்றிடமாகவே இருந்துள்ளன.	புதிய	முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.	அரசாங்கத்தால் அனைத்து ஆட்சேர்ப்புகளும் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக ஊழியர்களின் ஆட்சேர்ப்பு தாமதமடைந்துள்ளது. தொடர்புடைய ஆட்சேர்ப்புகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.	நிதியத்தின் தேவைகளை அடைவதற்குத் தேவையான குறைந்தபட்ச பணியாளர்களையேனும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	2023, 97வது பொறுப்பாளர் நிதியத்தினால் பணியாளர்களின் தேவையை மதிப்பாய்வு செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதோடு அதன் பரிந்துரைகளுக்கு பொறுப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்.

4. பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சி

4.1 வரவு செலவுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	புதிய அவதானிப்பா/ ஏற்கனவே உள்ள அவதானிப்பா என்பது	கட்டுப்பாட்டு ஆபத்தினை வெளிப்படுத்தல்	முகாமைத்துவத்தின் கருத்துக்கள்	விதப்புரை	எடுக்கப்பட்டுள்ள நவடிக்கை மற்றும் தற்போதைய நிலைமை
மீளாய்வாண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 75,000,000 ரூபா வருமானமும், மொத்தம் ரூ. 60,320,000 ஆன மீண்டெழும் செலவின வகைகள் 02 உம் மற்றும் மொத்தம் ரூ. 284,000,000 ஆன 07 மூலதனச் செலவின வகைகளும் நிதியத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	புதிய	ஏற்கனவே உள்ள முறைமைக்கு அமைந்தொழுக வேண்டும்.	இந்த ஆண்டில் உரிய திட்டங்கள் செயல்படுத்தப்படாததால், மேற்கூறிய மூலதனச் செலவினங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்படவில்லை. அதனால், எதிர்பார்த்த வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.	வருமான பிறப்பாக்கம் மற்றும் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ளல் வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க வேண்டும்.	நாட்டில் நிலவிய கோவிட் தொற்றுநோய் சூழ்நிலைக்கு மத்தியில் எதிர்பார்த்தபடி புதிய கருத்திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை என்பதால் எதிர்பார்த்த வருமானத்தை ஈட்ட முடியவில்லை. அதன்படி, மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளை மீளாய்வாண்டில் பயன்படுத்த முடியவில்லை.

கணக்குக் கூற்றுக்கள்

2022 டிசெம்பர் 31

மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்
நிதிநிலை பற்றிய கூற்று *(இலங்கை ரூபாவினால் வழங்கப்பட்டுள்ளது)*

டிசெம்பர் 31 ஆம் திகதியில்	**குறிப்பு**	**2022**	**2021**
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	**12**	810,946,010	841,968,416
அருவச் சொத்துக்கள்	**13**	422,219	669,280
முதலீட்டுச் சொத்துக்கள்	**14**	352,660,179	352,660,179
துணைக் கம்பெனியின் முதலீடு	**15**	985,000,000	985,000,000
வேறு முதலீடுகள்	**16**	2,200,000	2,200,000
நிதிச் சொத்துக்கள்	**17**	12,421,465,984	12,962,967,385
நடைமுறையல்லா மொத்த சொத்துக்கள்		**14,572,694,391**	**15,145,465,260**
நடைமுறைச் சொத்துக்கள்			
ஏனைய சொத்துக்கள்	**18**	2,465,271	6,125,764
முற்பணம் மற்றும் முன்கூட்டிய செலுத்தல்கள்	**19**	2,406,567	1,937,954
ஏனைய வருமதிகள்	**20**	1,444,206,429	377,876,221
NWCL இருந்தான வருமதிகள்		17,473,951	3,496,345
காசும் காசுக்குச் சமமானவைகளும்	**21**	64,586,566	1,926,327
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**1,531,138,783**	**391,362,611**
மொத்த சொத்துக்கள்		**16,103,833,176**	**15,536,827,871**
உரிமை முதல் மற்றும் பொறுப்புக்கள்			
உரிமை முதல்			
திரட்டிய நிதியம்		10,147,376,951	10,147,376,951
FVTOCI நிதிச் சொத்து ஒதுக்கம்		(1,787,093,302)	(168,796,660)
தடுத்துவைக்கப்பட்ட ஈட்டல்கள்		7,211,698,897	5,487,540,598
மொத்த உரிமை முதல்		**15,571,982,546**	**15,466,120,889**
நடைமுறையல்லா பொறுப்புக்கள்			
ஓய்வூதிய அனுகூலங்கள் கடப்பாடு	**22**	5,271,808	4,905,475
மொத்த நடைமுறையல்லா பொறுப்புகள்		**5,271,808**	**4,905,475**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அட்டுறு மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை	**23**	526,578,821	65,801,507
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		**526,578,821**	**65,801,507**
மொத்த உரிமை முதல் மற்றும் பொறுப்புக்கள்		**16,103,833,176**	**15,536,827,871**

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் முன்னளிக்கை செய்வதற்கும் பொறுப்பாளர் சபை பொறுப்புக்கூற வேண்டும். இந்த நிதிக்கூற்றுக்கள் பொறுப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளன.

ஒப்பம்:
திரு. A.M.P.M.B. அதபத்து
செயலாளர், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு
பதவி நிலை பொறுப்பாளர், மஹபொல நம்பிக்கை நிதியம்

ஒப்பம்:
திரு. S.V.D.K.குணசேகர
நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்
மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்

ஒப்பம்:
திரு.. M.P. பண்டார
பணிப்பாளர்
மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்

மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்

இலாபம் அல்லது நட்டம் மற்றும் பிற விபரமான வருமானங்கள் பற்றிய கூற்று

(இலங்கை ரூபாவினால் வழங்கப்பட்டுள்ளது)

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	**குறிப்பு**	**2022**	**2021**
வருமானம்	**7**	3,178,564,254	2,412,299,900
நேரடி செலவுகள்(புலமைப் பரிசில் செலுத்தல்கள்)	**8**	(1,366,549,835)	(1,052,955,600)
		1,812,014,420	**1,359,344,300**
வேறு வருமானங்கள்	**9**	472,798	534,614
மொத்த வருமானம்		**1,812,487,218**	**1,359,878,914**
நிருவாகச் செலவுகள்	**10**	(65,799,943)	(67,078,075)
நிதிக் கிரயம்	**11**	(71,020)	(71,025)
மொத்த செலவுகள்		**(65,870,963)**	**(67,149,100)**
வரிக்கு முந்திய மிகை /(பற்றாக்குறை)		**1,746,616,255**	**1,292,729,814**
வருமான வரிச் செலவுகள்		-	-
தேறிய மிகை /(பற்றாக்குறை)		**1,746,616,255**	**1,292,729,814**
ஏனைய விபரமான வருமானம் /(செலவு)			
ஏனைய விபரமான வருமானத்தின் மூலம் சீர்மதிப்புப் பெறுமதிக்கு கடன் சாதனப் பத்திரங்கள் மீது தேறிய இலாபம்/(நட்டம்)	**17.1**	(1,618,296,642)	(168,796,660)
வருடத்திற்கான விபரமான வருமானத்தின் பின்னரான தேறிய மிகை		**128,319,613**	**1,123,933,154**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

பக்கம் 05 முதல் 24 வரை கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் கட்டாயமான ஒரு பகுதியாகும்

மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்
காசுப் பாய்ச்சல் கூற்று *(இலங்கை ரூபாவினால் தரப்பட்டுள்ளது)*

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	**2022**	**2021**
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலமான நிதிப் பாய்ச்சல்		
தேறிய மிகை/(பற்றாக் குறை)	**1,746,616,255**	**1,292,729,814**
சீராக்கல்கள்:		
தேய்மானம்	31,299,967	31,589,511
நிலையான வைப்புகளின் கையுதிர்வு இலாபம்	-	772,000
பணிக்கொடை	366,333	317,630
கடந்த வருடத்திற்கான சீராக்கல்கள்	(22,488,456)	157,863,504
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முந்திய தொழிற்பாட்டு மிகை	**1,755,794,099**	**1,483,272,459**
தொழிற்படு மூலதன மாற்றங்கள்		
ஏனைய வருமதிகளின் அதிகரிப்பு / குறைவடைதல்	(1,077,115,933)	339,677,165
ஏனைய செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு / குறைவடைதல்	460,777,314	(244,329,921)
தொழிற்பாடுகளின் மூலமான நிதி	**(616,338,619)**	**95,347,244**
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலமான தேறிய நிதி உட்பாய்ச்சல்/வெளிப்பாய்ச்சல்	**1,139,455,480**	**1,578,619,703**
முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான நிதிப் பாய்ச்சல்		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கைப்பற்றுதல்	-	(343,921,459)
அருவச் சொத்துக்களை கைப்பற்றுதல்	-	(283,306)
நிலையான சொத்துக்களை கையுதிர்வதன் மூலமான விற்பனை ஈட்டல்கள்	-	-
நிதிச் சொத்துக்களில் முதலீடுகள்/(மீளப் பெறல்)	(1,076,795,241)	(1,304,552,843)
முதலீட்டு செயற்பாடுகளின் மூலமான தேறிய நிதி உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	**(1,076,795,241)**	**(1,648,757,608)**
நிதி நடவடிக்கைகளின் மூலமான நிதி உட்பாய்ச்சல்		
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-
நிதி நடவடிக்கைகளின் மூலமான தேறிய நிதி உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	-	-
காசும் காசுக்குச் சமமானவைகளினதும் தேறிய அதிகரிப்பு /குறைவடைதல்	**62,660,239**	**(70,137,904)**
சனவரி 01 இல் காசும் காசுக்குச் சமமானவைகளும்	1,926,327	72,064,231
டிசெம்பர் 31 இல் காசும் காசுக்குச் சமமானவைகளும்	**64,586,566**	**1,926,327**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக

		திரண்ட நிதியம்	FVTOCI நிதி சொத்துக்களின் ஒதுக்கம்	தடுத்துவைக்கப் பட்ட ஈட்டல்கள்	மொத்தம்
2021 சனவரி 01 இல் நிலுவை		**10,147,376,951**	**-**	**4,036,947,280**	**14,184,324,231**
வருடத்திற்கான தேறிய மிகை/(பற்றாக்குறை)		-	-	1,292,729,814	1,292,729,814
ஏனைய விபரமான வருமான வருமானம்/(செலவு)			(168,796,660)		(168,796,660)
கடந்த வருடத்திற்கான சீராக்கல்கள்	**(குறிப்பு I)**	-	-	157,863,504	157,863,504
2021 டிசெம்பர் 31ஆம் திகதியில் நிலுவை		**10,147,376,951**	**(168,796,660)**	**5,487,540,598**	**15,466,120,889**
வருடத்திற்கான தேறிய மிகை/(பற்றாக்குறை)		-	-	1,746,616,255	1,746,616,255
ஏனைய விபரமான வருமானம்/(செலவுகள்)		-	(1,618,296,642)	-	(1,618,296,642)
கடந்த வருடத்திற்கான சீராக்கல்கள்	**(குறிப்புI/II/III)**	-	-	(22,457,956)	(22,457,956)
2022 டிசெம்பர் 31 இல் நிலுவை		**10,147,376,951**	**(1,787,093,302)**	**7,211,698,897**	**15,571,982,546**

குறிப்பு 1

கடந்த வருடத்திற்கான அபிவிருத்தி லொத்தர் சபையின் பங்கு இலாபத்தின் திருத்தத்தினை கடந்த வருடத்திற்கான சீராக்கல்

(குறிப்பு/ II)
கடந்த ஆண்டுகளுக்கான திறைசேரி பிணைமுறிகளின் முகப் பெறுமதி திருத்தத்தினை கடந்த வருடத்திற்கான சீராக்கல்

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. **நிறுவனம் சார்ந்த தகவல்கள்**

1.1 **பொதுவான விடயங்கள்**

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் (நம்பிக்கை நிதியம்) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நம்பிக்கை நிதியமொன்றாக இருப்பதுடன் இந்த நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவகம் கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் இலக்கம் 191 இல் அமைந்துள்ள ஜே.ஆர்.ஜயவர்தன நிலையத்தின் 4 ஆம் மாடியில் அமைத்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

சிறப்புரிமைகளைக் கொண்டிராத இளைஞர் யுவதிகளுக்கு உயர்கல்வியை பெற்றுக்கொள்வதற்காக புலமைப் பரிசில்களை வழங்குதல் மற்றும் உயர்கல்விக்கான வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் சம வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

1.2 மஹபொல நம்பிக்கை நிதியம்

நிதியத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

- இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்விக்கான வசதிகளை வழங்குதல்.

- இரண்டாம் நிலைக் கல்வியை திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்துள்ள தகுதியுடைய இளைஞர் யுவதிகளுக்கு பல்கலைக்கழகமொன்றில் அல்லது தொழில்நுட்ப அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் கல்விசார், தொழில்சார் அல்லது தொழில்நுட்பக் கல்வியை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கு உதவி வழங்குதல்.
- இளைஞர் யுவதிகளுக்கு தமது தொழில்சார் திறன்களையும் ஆற்றல்களையும் விருத்தி செய்துகொள்ளக்கூடிய வகையில் தொழிற் பயிற்சி நிறுவனங்களை அமைப்பதற்கும் அவற்றின் முகாமைத்துவத்திற்கும் உதவியளித்தல்.

- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள் நிறுவனங்கள், மன்றங்கள் மற்றும் ஒத்த நிறுவனங்களை அமைத்தல், நடத்துதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு உதவி புரிதல்.

- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவி வழங்குதல்.

1.3 வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட திகதி

2023 பெப்ருவரி மாதம் 07 ஆம் திகதி பொறுப்பாளர் சபையின் தீர்மான நிறைவேற்றுதலின் பிரகாரம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது.

2. தயாரிப்பிற்கான அடிப்படை

2.1 இணக்கக் கூற்று

2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, விவரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளைக் கொண்டமைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களைக் (LKAS) கொண்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 அளவீட்டு அடிப்படை

வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலே தவிர அட்டுறு அடிப்படை மற்றும் வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
நிறுவனத்தின் பிரயோக மற்றும் சமர்ப்பிக்கும் நாணயமாகிய இலங்கை ரூபாவில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.3 பொருண்மைத் தன்மை மற்றும திரட்சி

நிதிக்கூற்றுக்களை முன்வைக்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 (LKAS 01) இற்கமைய இணையான உருப்படிகளின் ஒவ்வொரு அளவு ரீதியிலான வகை நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளது. வேறுபட்ட தன்மை அல்லது செயற்பாட்டு உருப்படிகள் அவை அளவு ரீதியில் இல்லையெனில் தவிர தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இனங்காணப்பட்ட பெறுமதியை எதிரீடு செய்வதனை வலுப்பெறச் செய்ய முடியுமான சட்டரீதியான உரிமையொன்று நிலவுமாயின் மாத்திரம் நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களை எதிரீடு செய்து நிதி நிலைமைக் கூற்றில் தேறிய பெறுமதி அறிக்கையிடப்படுவதுடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது கைத்தேறியதற்கு இணையாக பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கான விருப்பம் இருப்பின் மாத்திரமே அவ்வாறு மேற்கொள்ளப்படும். நிதிசார் கொள்கைகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கணக்கீட்டு நியமமும் பொருள்கூறல் ஊடாக விதிக்கப்பட்டிருப்பின் அல்லது அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே தவிர வருமானக் கூற்றில் வருமானம் மற்றும் செலவுகள் எதிரீடு செய்யப்படமாட்டாது.

2.4 ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்

புதிய இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களைப் பயன்படுத்துவதன் பெறுபேறாக மாற்றியமைக்க வேண்டியேற்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தவிர நம்பிக்கை நிதியத்தினால் நிதி கூற்றுக்களை முன்வைக்கும் LKAS 01 இன் பிரகாரம் முன்னைய ஆண்டில் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் இந்த ஆண்டிலும் தொடர்ந்தும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. அத்துடன் தற்போதைய சமர்ப்பித்தலுக்கு அமைந்தொழுகுவதற்காக தேவையான இடங்களில் ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள் மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

நம்பிக்கை நிதியத்தினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. கீழ் குறிப்பிடப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டாலேயொழிய இந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதிகளுக்கும் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன.

3.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

3.1.1 ஏற்பிசைவிற்கான அடிப்படை

சேவை வழங்கும் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற உருவச் சொத்துக்களை ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்குள் உட்பாயும் ஆற்றல் நிலவுமாயின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் சொத்துக்களுக்கான செலவுகளை நம்பகத்தன்மையுடன் கணக்கிடவும் முடியும்.

3.1.2 அளவீட்டு அடிப்படை

சொத்துக்களாக ஏற்பிசைவு செய்வதற்குப் பொருத்தமான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படியொன்று ஆரம்பமாக கிரயத்திற்கமைய அளவிடப்படும். குறிப்பிட்ட ஆதனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவு மற்றும் பின்னர் அதற்காக ஒரு பகுதியை சேர்த்துக்கொள்வதற்கு அல்லது பழைய பகுதிக்குப் பதிலாக புதிய பகுதியொன்றை சேர்த்துக்கொள்வதற்கு செலவாகும் தொகை செலவுக்குள் (கிரயத்திற்குள்) உள்ளடங்கும். சுயமாக உருவாக்கப்பட்ட சொத்துக்களுக்கான மூலப்பொருட்களுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் மற்றும் நேரடி ஊழியம், உருப்படியைக் கொண்டுவரல், அவை வைக்கப்படும் இடத்தில் வைத்தல் மற்றும் மூலதனக் கடன்பெறல் செலவு என்பன நேரடியாக வெளிப்படுத்தப்படும் வேறு எந்த வகையான செலவும் உள்ளடக்கப்படும். கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் குறிப்பிட்ட உபகரணத்தின் செயற்பாட்டிற்காக அத்தியாவசியமாயின் அதனை கணனி உபகரணத்தின் ஒரு பகுதியாக மூலதனப்படுத்தப்படும்.

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படியொன்றின் ஒரு பகுதியில் பயன்தரு ஆயுட்காலம் நிலவும்போது அவை ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் தனித் தனியான உருப்படிகளாக (பிரதான கூறுகள்) கணக்கிடப்படும்.

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக நம்பிக்கை நிதியம் கிரய மாதிரியைப் பயன்படுத்துவதோடு திரண்ட தேய்மானங்கள் மற்றும் ஏதேனும் அட்டுறு சேத இழப்பு நட்டத்தைக் கழித்து கொள்வனவு அல்லது நிர்மாணத்திற்கான ஏதேனும் இடைநேர்விளைவான செலவுகளுடன் அவற்றுக்கான கிரயத்திற்கு அறிக்கையிடப்படும்.

3.1.3 பின்னரான (அடுத்தடுத்த) செலவுகள்

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான உருப்படியொன்றின் ஒரு பகுதியினுள் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் உட்பாய்வதற்கான வாய்ப்புக்கள் நிலவுமாயின் மற்றும் செலவுகளை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அவ்வாறான ஒரு பகுதியின் மாற்றீட்டுச் செலவு அந்த உருப்படியின் முன்கொண்டு செல்லப்படும் தொகைக்கு ஏற்பிசைவு செய்யப்படும். சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அன்றாடம் பராமரிப்பதற்கான செலவுகளை செலவிடப்படும் விதத்தில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் கூற்றில் உள்ளடக்கிக் கொள்ளப்படும்.

3.1.4 பழுதுபார்ப்பும் பராமரிப்பும்

பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அவை மேற்கொள்ளப்பட்ட நிதிசார் காலத்துடன் தொடர்பான வகையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் குறிப்பிடப்படும். ஒரு சொத்தின் இனங்காணப்பட்ட பகுதியொன்றின் மிகவும் கிட்டிய கால புனரமைப்பினை விஞ்சி எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றபோது பிரதான புனரமைப்பின் கிரயம் சொத்தின் முன்கொண்டு

செல்லப்படும் பெறுமதியில் உள்ளடக்கப்படும். தொடர்புடைய சொத்துக்களின் மீதி பயன்தரு ஆயுட்காலத்தில் பிரதான புனரமைப்புகள் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

3.1.5 ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அகற்றப்படுதல் அல்லது அதன் பயன்பாட்டின் மூலம் எதுவித எதிர்கால அனுகூலங்களும் எதிர்பார்க்கப்படாத சந்தர்ப்பத்தில் அவை ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படும். சொத்துக்களின் ஏற்பிசைவிலிருந்து விலக்குவதனால் ஏற்படும் எந்தவொரு இலாபமும் அல்லது நட்டமும் (தேறிய அகற்றல் இலாபம் மற்றும் சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கிடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படும்) குறிப்பிட்ட ஆண்டின் ஏனைய தொழிற்பாட்டு வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.1.6 தேய்மானம்

சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்களில் எதிர்பார்க்கப்படும் நுகர்வுச் செயல்முறை இந்த முறையியல் மூலம் கிட்டிய வகையில் வெளிப்படுத்தப்படுவதனால் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற உருப்படிகளின் அனைத்துப் பகுதிகளிலும் மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலத்திற்கமைய நேர் கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தேய்மானம் ஏற்பிசைவு செய்யப்படும்.

மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

கட்டிடங்கள் மற்றும் பொருத்துகைகள்	20 வருடங்கள்
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	05 வருடங்கள்
அலுவலக உபகரணங்கள்	05 வருடங்கள்
கணனிகள் மற்றும் துணைப் பாகங்கள்	04 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள்	04 வருடங்கள்

ஆதனம், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான உருப்படிகளின் ஒவ்வொரு விசேட பகுதிக்குமான தேய்மான விகிதம் அவற்றைப் பயன்படுத்தும் காலத்தின்போது தீர்மானிக்கப்படும். அதாவது, அவை உரிய இடத்தில் இருக்கும்போதும் முகாமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் செயற்பாட்டு நிலைமையில் இருக்கும்போதும் தீர்மானிக்கப்படும். தேய்மான வழிமுறைகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் ஈற்றுப் பெறுமதிகள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மதிப்பீடு செய்யப்பட்டு பொருத்தமாயின் சீர்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

3.1.7 அருவச் சொத்துக்கள்

சொத்துக்கு உடைமையாக்க முடியுமான எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிதியத்திற்கு உட்பாய முடியுமாக இருப்பதுடன் சொத்துக்களின் கிரயத்தை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அருவச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படும். அருவச் சொத்தொன்று ஆரம்பத்தில் கிரயத்தின் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. வணிக சேர்க்கை (கூட்டு) ஊடாக கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துக்களின் கிரயமானது கையப்படுத்தப்பட்ட தேதியில் உள்ள நியாயமான பெறுமதியாகும். ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் அருவச் சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் திரண்ட சேத இழப்புகளைக் கழித்து கிரயத்தில் காட்டப்படும். உள்ளக அடிப்படையில் உருவாக்கப்பட்ட அருவச் சொத்துக்கள் மூலதன மயப்படுத்தப்படாதிருப்பதுடன் அது சம்பந்தமான செலவுகள், அச்செலவுகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டின் இலாபம் அல்லது நட்டங்களில் காட்டப்படும்.

வரையறுக்கப்பட்ட ஆயுட் காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள்

வரையறுக்கப்பட்ட ஆயுட் காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் பயன்தரு பொருளாதார ரீதியிலான ஆயுட் காலம் பூராக மதிப்பிறக்கம் செய்யப்படுவதோடு அருவச் சொத்துக்கள் சேதமடைந்திருக்க வாய்ப்புள்ளதாக உணர முடியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் சேதத்திற்காக மதிப்பீடு செய்யப்படும். வரையறுக்கப்பட்ட பயன்தரு ஆயுட் காலத்தைக்கொண்ட அருவச் சொத்தொன்றுக்கான மதிப்பிறக்கக் காலம் மற்றும் மதிப்பிறக்க முறை ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க ஆயுட் காலத்தின் அல்லது சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார ரீதியிலான அனுகூலங்களின் எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க நுகர்வு முறையின் மாற்றங்கள், பொருத்தமானவாறு மதிப்பிறக்கக் காலப்பகுதி அல்லது முறையியல் மாற்றியமைக்கப்படுவதன் மூலம் விபரிக்கப்படுவதோடு அவை கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். வரையறுக்கப்பட்ட ஆயுட் காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்களில் மதிப்பிறக்கச் செலவினம் வருமானக் கூற்றில் அருவச் சொத்துக்களின் செயற்பாட்டுடன் இயைந்துள்ள செலவு வகையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

அருவச் சொத்துக்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

உருப்படி	**ஆயுட் காலம்**
கணனி மென்பொருள்	5 வருடங்கள்
இணையத்தளம்	5 வருடங்கள்

ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்

அருவச் சொத்தொன்று அகற்றப்படுவதன் மீது அல்லது அதன் பயன்பாட்டின் மூலம் எதிர்கால அனுகூலங்கள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அதன் முன்னெடுத்துச் செல்லப்படும் பெறுமதி ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படும். அருவச் சொத்தொன்று ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படுவதன் மூலம் எழுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் அகற்றப்படும் தேதியில் தேறிய கையுதிர்வு வருமானம் மற்றும் சொத்துக்கான முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படுவதோடு சொத்து ஏற்பிசைவிலிருந்து விலக்கும்போது இலாப அல்லது நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2 முதலீட்டுச் சொத்துக்கள்

3.2.1 ஏற்பிசைவு மற்றும் அளவீட்டுக்கான அடிப்படை

வாடகை வருமானம் ஈட்டல் அல்லது மூலதனப் பெறுமதி அதிகரித்தல் அல்லது இந்த இரண்டு விடயங்களுக்குமான ஆனாலும் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின்போது விற்பனை செய்வதற்கல்லாத சொத்துக்கள் முதலீட்டுச் சொத்துக்களாகும். இந்த சொத்துக்கள் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அல்லது வழங்கல்களுக்காக அல்லது நிர்வாக விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

முதலீட்டுச் சொத்துக்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் அதன் கிரயத்திற்கு ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் முதலீட்டுச் சொத்துக்கள் அதன் கிரயத்தின் அடிப்படையில் குறிப்பிடப்படுகின்றன.

3.2.2 ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்

முதலீட்டுச் சொத்துக்கள் அகற்றப்பட்டுள்ளபோது அல்லது முதலீட்டுச் சொத்துக்கள் நிரந்தரமாக பயன்பாட்டிலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளபோது மற்றும் அவ்வாறு அகற்றுவதன் மூலம் எவ்வித எதிர்கால பொருளாதார அனுகூலமொன்றையும் எதிர்பார்க்காதபோது முதலீட்டுச் சொத்துக்கள் ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படும். முதலீட்டுச் சொத்தொன்றை அகற்றுதல் அல்லது நீக்குதல் காரணமாக ஏற்படும்

இலாபம் அல்லது நட்டம் அந்த முதலீட்டுச் சொத்தை அகற்றுதல் அல்லது நீக்குதலை மேற்கொண்ட ஆண்டிலேயே இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2.3 முதலீட்டுச் சொத்தொன்றுக்கு / முதலீட்டுச் சொத்தொன்றிலிருந்து பிற்பட்ட மாற்றல்கள்

உரிமையாளரின் ஆட்சியுரிமை முடிவுறல், வேறு தரப்பொன்றுக்கு தொழிற்பாட்டு குத்தகையொன்றை ஆரம்பித்தல் அல்லது கட்டுமானப் பணி அல்லது அபிவிருத்தி நிறைவு பெறல் மூலம் சான்றளிக்கப்படும் பயன்பாட்டில் மாற்றமொன்று ஏற்படும்போது மாத்திரம் முதலீட்டுச் சொத்தொன்றுக்கு மாற்றல்கள் மேற்கொள்ளப்படும்.

உரிமையாளரின் ஆட்சியுரிமை முடிவுறல் அல்லது விற்பனை செய்யும் நோக்கத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் சான்றளிக்கப்பட்ட பயன்பாட்டில் மாற்றமொன்று ஏற்படும்போது மாத்திரம் முதலீட்டுச் சொத்தொன்றிற்கு மாற்றல்கள் மேற்கொள்ளப்படும்.

முதலீட்டுச் சொத்தொன்றிலிருந்து உரிமையாளர் குடியுள்ள சொத்தொன்றுக்கு மாற்றலுக்காக, பிற்கால கணக்கீட்டுக்கான அச் சொத்தின் கருதப்படு கிரயமானது பயன்பாட்டில் மாற்றம் ஏற்பட்ட தினத்தில் அதன் நியாயமான பெறுமதியாகும். உரிமையாளர் வசிக்கும் சொத்தொன்றைப் போன்று சொத்தை கம்பெனி பயன்படுத்தினால் அது முதலீட்டுச் சொத்தொன்றாக இருப்பதுடன் அதன் பயன்பாட்டில் மாற்றம் ஏற்படும் தினம் வரையும் ஆதனம், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைக்கமைய அந்தச் சொத்துக்கு கம்பெனி பொறுப்புக்கூற வேண்டும்.

பங்கொன்றை முதலீட்டுச் சொத்தொன்றாக மாற்றும்போது சொத்தின் நியாயமான பெறுமதிக்கமைய குறிப்பிட்ட தினத்தில் அதன் முழுமையான முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியில் நிலவும் வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். கம்பெனியினால் நிர்மாணிக்கப்பட்ட முதலீட்டுச் சொத்தொன்றில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகள் அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகள் கம்பெனியினால் நிறைவு செய்யப்படும்போது சொத்தின் நியாயமான பெறுமதிக்கமைய குறிப்பிட்ட தினத்தில் மற்றும் அதன் முன்னைய முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியில் நிலவும் வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2.4 நிதியல்லா சொத்துக்களின் சேத இழப்பு

சொத்துக்களுக்கான சேத இழப்பு பற்றிய அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதை துல்லியமாக அறிந்துகொள்வதற்காக கம்பெனியினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஏதேனும் அறிகுறி இருப்பின் அல்லது சொத்தொன்றுக்காக வருடாந்த சேத இழப்பு பற்றிய சோதனை தேவைப்படுமாயின் நிதியத்தினால் சொத்தின் மீளப் பெறத்தக்க தொகை மதிப்பீடு செய்யப்படும். சொத்தின் மீளப் பெறத்தக்க தொகை எனப்படுவது சொத்தொன்றின் காசுப் பிறப்பாக்க அலகொன்றின் விற்பனைச் செலவு கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதி மற்றும் அதன் பயன்பாட்டுப் பெறுமதி ஆகிய இரண்டில் அதிகமான பெறுமதி சொத்தொன்றின் மீளப் பெறத்தக்க தொகையாகும். சொத்தொன்று காசுப் பாய்வுகளைப் பிறப்பிக்காத சந்தர்ப்பங்களில் இது தனிச் சொத்தொன்றாக தீர்மானிக்கப்படுவதுடன் ஏனைய சொத்துக்களிலிருந்தோ அல்லது சொத்துக்களின் குழுமங்களிலிருந்தோ அநேகமாக சுயாதீனமானதாக இருக்கும். சொத்தொன்றின் அல்லது காசு பிறப்பாக்கி அலகொன்றின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி அதன் மீளப் பெறத்தக்க பெறுமதியை விஞ்சும் சந்தர்ப்பமொன்றின்போது சொத்து சேத இழப்புக்கு உட்பட்டிருப்பதாக கருதப்படுவதுடன் அந்த சொத்தை அதன் மீளப் பெறத்தக்க பெறுமதியில் குறித்துக்கொள்ளப்படும். பயன்படுத்தப்படும் பெறுமதியை மதிப்பீடு செய்யும்போது பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்திற்கு விசேடமான ஆபத்துக்களின் நடப்பு சந்தைப் பெறுமதி மதிப்பீட்டை வெளிப்படுத்தும் வரிகளுக்கு முன்னரான கழிவு வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அவற்றின் நிகழ்கால பெறுமதிக்கு கழிவு விதிக்கப்படும். விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதியைத்

தீர்மாணிக்கும்போது கிட்டிய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் (பணப் பரிமாற்றங்கள்) இருப்பின் அவை கவனத்திற் கொள்ளப்படும். அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டுகொள்ள முடியாவிட்டால் பொருத்தமான கணக்கீட்டு மாதிரி பயன்படுத்தப்படும்.

3.3 துணைக் கம்பெனிகளில் முதலீடுகள் மற்றும் ஏனைய முதலீடுகள்

துணைக் கம்பெனிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மற்றும் ஏனைய முதலீடுகள் ஆரம்ப கட்டத்தில் கம்பெனியின் நிதிக் கூற்றுக்களில் கிரயமாக ஏற்பிசைவு செய்யப்படும். துணைக் கம்பெனிகளை கையகப்படுத்திக்கொள்வதுடன் தொடர்புடைய ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் கிரயமாக அச் சந்தர்ப்பத்திலேயே வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் துணைக் கம்பெனிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ஆரம்ப கட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டதன் பின்னர் திரண்ட சேத இழப்புகளைக் கழித்ததன் பின்னர் கிரய அடிப்படையில் குறிப்பிடப்படும்.

3.4 வெளிநாட்டு நாணயங்கள்

அ) செயல்படு மற்றும் சமர்ப்பிக்கும் நாணயம்

இந்த நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் இந் நிறுவனம் செயற்படும் முதனிலை பொருளாதார சூழலில் பிரயோக நாணய அலகினால் (செயல்படு பண அலகு) அளவிடப்படும். நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது கம்பெனியின் செயல்படு மற்றும் சமர்ப்பிக்கும் நாணய அலகாகும்.

ஆ) கொடுக்கல் வாங்கல்கள் (பரிமாற்றல்கள்) மற்றும் நிலுவைகள்

வெளிநாட்டு நாணய அலகுகளினால் மேற்கொள்ளப்படும் பரிமாற்றல்கள், குறிப்பிட்ட பரிமாற்றல்கள் மேற்கொள்ளப்படும் தினங்களில் வலுவில் இருக்கும் செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி பிரயோக நாணய அலகிற்கு மாற்றப்படும். அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்க்கும்போது மற்றும் வெளிநாட்டு பிரயோக நாணய அலகுகளினால் மேற்கொள்ளப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கொடுக்கல் வாங்கல்களின்போது பெறுபேறான அந்நியச் செலாவணி இலாபம் மற்றும் நட்டம் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு நிலுவைகள் ஆண்டிறுதி செலாவணி வீகிதத்திற்கமைய மாற்றப்படும்.

3.5. வரி விதிப்பு

3.5.1 நடப்பு வரி விதிப்பு

நடப்பு மற்றும் முன் காலப் பகுதிகளுக்காக நடப்பு வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வருமான வரி ஆணையாளரிடமிருந்து பெறப்பட வேண்டிய அல்லது அந்தத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய நிதி அளவின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகின்றது. இந்த அளவுகளைக் கணக்கிடுவதற்காக அறிக்கையிடப்படும் தினத்திற்கு முன்னரிலிருந்து அமுல்படுத்தப்பட்ட அல்லது அன்றைய தினத்தில் அமுல்படுத்தப்படும் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள வரி விகிதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நம்பிக்கை நிதியத்திற்கான வருமான வரி நிதி ஏற்பாட்டுக்குரிய அடிப்படை கீழுள்ளவாறாகும்.

அ) மஹபொல நம்பிக்கை நிதியம்

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் வருமான வரிக்கு உட்படுவதோடு இறுதி வரியானது காலப் பகுதிக்கான தேறிய வருமானம் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட செலவாக கருதப்படும் அனைத்துச் செலவுகள் மீது கணக்கிடப்படுவதோடு அதன் பின்னர் வரிக் கணக்கீட்டின் மீது இறுதி வருமானம் நிர்ணயிக்கப்படும்.

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் வருமான வரி பற்றிய அமைச்சரவையின் தீர்மானம்.

அமைச்சரவை விஞ்ஞாபனம் - கொள்கை ரீதியான விடயங்கள்

1981 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில் துல்லியமாக காட்டப்பட்டள்ள வகையில் தீர்வை வரி, இறக்குமதி வரி, வருமான வரி, அன்பளிப்பு வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி உட்பட அனைத்து வரிகளிலிருந்தும் விலக்குப் பெறுவதற்காக 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் மூன்றாம் அட்டவணையில் மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தை உள்ளடக்குவதற்காக உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரினால் 2019.12.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிருபமொன்றாகிய அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 20/0144/215/010 – நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகளுடன் மேற்படி நிருபம் கவனத்தில் கொள்ளப்பட்டது. கலந்துரையாடல்களின் பின்னர் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் செயலாளருடன் இணைந்து நிருபத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கத்திற்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்திற்காக முன்மொழிவொன்றை முன்வைப்பதற்கான இயலுமை தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிடுவதற்கும் அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

3.5.2 பிற்போடப்பட்ட வரி

அறிக்கையிடும் திகதியன்று சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதிகளிடையே தற்காலிக மாற்றங்களின் அடிப்படையில் கடன்பாட்டு முறையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

அனைத்து தற்காலிக மாற்றங்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படும்.

குறைக்க முடியுமான அனைத்து தற்காலிக மாற்றங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரிக் கடன் மற்றும் வரி நட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவது பயன்படுத்தக்கூடிய வரி அறவிடக்கூடிய இலாபம் கிடைக்கும் இயலுமை உள்ள அளவிற்கு குறைக்க முடியுமான தற்காலிக மாற்றங்கள், பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் வரி நட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.6 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக கையிருப்பிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள பணம், கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலப் பகுதிக்குள் ஆரம்ப முதிர்ச்சியடையும் தினத்தினைக்கொண்ட உயர் திரவத்தன்மையைக் கொண்ட ஏனைய குறுகிய கால முதலீடுகள் உள்ளடக்கப்படுகின்றன. வங்கி மிகைப்பற்று வசதிகள் ஐந்தொகையில் (இருப்புப் பத்திரத்தில்) நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

4 நிதிச் சாதனங்கள் - ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் பின் தொடர் அளவீடுகள்

4.1 நிதிச் சொத்துக்கள்

4.1.1 நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடு

2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய, நம்பிக்கை நிதியம் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்காக வர்த்தக மாதிரியின் அடிப்படையில் அதன் அனைத்து நிதிசார் சொத்துக்களையும் வகைப்படுத்துவதோடு சொத்துக்கான ஒப்பந்தஞ்சார் விதிகள்,

- தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்திற்கு
- ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதிக்கு (நடுநிலைப் பெறுமதி) (FVOCI)
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதிக்கு (FVTPL) அளவீடு செய்யப்படும்.

நிதிசார் சொத்துக்களின் பின்னிட்ட அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலின் மீது தங்கியுள்ளன.

4.1.2 தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்

நிதிசார் சொத்தொன்று கீழ் குறிப்பிடப்படும் இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமாயின் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில் பெயர் குறிப்பிடப்படாதிருப்பின் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இற்கமைய அந்த நிதிச் சொத்து தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படும்.

- ஒப்பந்த அடிப்படையிலான காசுப் பாய்வுகளை ஒன்றுசேர்ப்பதற்காக சொத்துக்களைத் தடுத்து வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்ட வர்த்தக மாதிரியினுள் சொத்துக்களைத் தடுத்துவைத்திருத்தல்.
- நிதிசார் சொத்தின் ஒப்பந்த நிபந்தனைகளின் மூலம் குறிப்பிட்ட திகதிகளில் தீர்க்கப்படாதுள்ள ஆரம்பத் தொகை மற்றும் அத்தொகையின் மீதான வட்டி செலுத்தல்களான நிதிப் பாய்வுகளை உருவாக்குதல்.

4.1.3 ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்

ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள், ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட கடன் மற்றும் உரிமையாண்மைக் கருவிகள் என்பவற்றைக் கொண்டமைந்திருக்கும்.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இற்கமைய, ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட கடன் சாதனங்கள் மற்றும் ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு பெயர் குறிப்பிடப்பட்ட உரிமையாண்மைக் கருவிகள் என்பவற்றைக் கொணடு இது அமைந்திருக்கும்.

4.1.4 ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட கடன் சாதனங்கள்

கடன் சாதனமொன்று கீழ் குறிப்பிடப்படும் இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமாயின் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில் பெயர் குறிப்பிடப்படாதிருப்பின் மட்டும் ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்படும்.

- ஒப்பந்த அடிப்படையிலான காசுப் பாய்வுகளை ஒன்றுசேர்த்தல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் மூலம் தனது நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ளும் வர்த்தக மாதிரியினுள் சொத்துக்களைத் தடுத்து வைத்திருத்தல்.

- நிதிசார் சொத்தின் ஒப்பந்த நிபந்தனைகளின் மூலம் குறிப்பிட்ட திகதிகளில் தீர்க்கப்படாதுள்ள ஆரம்பத் தொகை மற்றும் அத்தொகையின் மீதான வட்டி செலுத்தல்களான நிதிப் பாய்வுகளை உருவாக்குதல்.

சீர்மதிப்புப் பெறுமதி கடன் சாதனங்கள், ஏனைய விபரமான வருமானத்தில் இல் ஏற்பிசைவு செய்யப்படும் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றமடைவதனால் எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் சீர்மதிப்புப் பெறுமதியில் பின்னர் அளவீடு செய்யப்படும். வட்டி வருமானம் மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்கள் மற்றும் மாற்றங்கள் இலாபம் மற்றும் நட்டத்தினுள் ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவிலிருந்து விலக்கும்போது ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்கனவே ஏற்பிசைவு செய்யப்பட்ட திரட்டிய இலாபம் அல்லது நட்டத்தை ஏனைய விபரமான வருமானத்திலிருந்து இலாபம் மற்றும் நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படும். இதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் கீழ் விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்ட அரசாங்கப் பிணையங்களைக் கொண்டு இந்த சாதனங்கள் அமைந்துள்ளன.

4.1.5 ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் பிரகாரமான உரிமையாண்மைக் கருவிகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 32இல் நிதிச் சாதனங்களைச் சமர்ப்பித்தல் என்பதன் கீழ் உரிமையாண்மை எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துவதற்காக இயைந்து செல்லும் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வைத்துக்கொள்ளப்படாத உரிமையாண்மை கருவிகளில் மூலோபாய ரீதியிலான அலுவல்களுக்காக வைத்துக்கொள்ளப்பட்ட உரிமையாண்மை முதலீடுகளின் ஒரு பகுதியை ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய (FVOCI) கடன் சாதனமாக இரத்துச்செய்ய முடியாத வகையில் வகைப்படுத்துவதற்கு சிலவேளை கம்பெனியினால் தீர்மானிக்கப்படும். அவ்வாறான வகைப்படுத்தல் கருவிக்குக் கருவி எனும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

இந்த உரிமையாண்மைக் கருவிகளின் இலாபம் மற்றும் நட்டம் ஒருபோதும் இலாபம் அல்லது நட்டத்தின் கீழ் கொள்ளப்படாதிருப்பதுடன் அதற்குப் பதிலாக ஏற்பிசைவிலிருந்து அகற்றும் சந்தர்ப்பத்தில் தடுத்துவைக்கப்பட்ட ஈட்டல்களுக்கு நேரடியாக மாற்றப்படும். செலுத்துவதற்கான உரிமை தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் பங்கிலாபங்கள் இலாபம் அல்லது நட்டமாக ஏனைய செயற்பாட்டு வருமானங்களின் கீழ் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் கீழான கடன் சாதனங்கள் சேத இழப்பு தொடர்பான சோதனைக்கு உட்படுத்தப்பட மாட்டாது.

இதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமம் 39இல் விற்பனைக்காக உள்ள இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட விலை குறிப்பிடப்படாத உரிமைப் பங்குகளை இந்தக் கருவிகள் கொண்டிருக்கும்.

4.1.6 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 9இற்கமைய, தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அல்லது ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள் தவிர ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். வர்த்தக நோக்கத்திற்காக தடுத்துவைக்கப்பட்ட அல்லது முகாமைப்படுத்தப்படும் மற்றும் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை ஒன்றுசேர்ப்பதற்கு ஏற்றிராததைப் போன்றே காசுப் பாய்ச்சல்களை ஒன்றுசேர்ப்பதற்கு மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் போன்ற இரண்டு அலுவல்களையும் கொண்டிருக்காமையினால் அதன் செயலாற்றுகை சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக பெயரிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய பெயரிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிச் சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிச் சொத்துக்களின் கீழ் இலங்கை கணக்கீட்டு நியமம் 39இற்கமைய, வர்த்தக நோக்கத்திற்காக தடுத்து வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் உள்ளடக்கப்படும்.

4.2 நிதிப் பொறுப்புக்கள் (நிதிக் கடன்பாடுகள்)

4.2.1 நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் பின் தொடர் அளவீடுகள்

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இற்கமைய, நிதிப் பொறுப்புக்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிப் பொறுப்புக்கள், மற்றும்
  - வர்த்தக நோக்கத்திற்காக தடுத்து வைக்கப்பட்டவை அல்லது
  - இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு பெயர் குறிப்பிடப்பட்டவை என வகைப்படுத்தப்படும்.
- தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட நிதிப் பொறுப்புக்கள்

நிதிப் பொறுப்புக்களின் பின் தொடர் அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலின் மீது தங்கியுள்ளன.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9) ஊடாக நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தலுக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) இல் காணப்படுகின்ற தேவைகள் அநேகமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

4.2.2 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிப் பொறுப்புக்கள்

வர்த்தக நோக்கத்திற்காக தடுத்துவைக்கப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் பெயர் குறிப்பிடப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிப் பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்படாத நிதிப் பொறுப்புக்கள் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்திற்கமைய நிதிப் பொறுப்பாக வகைப்படுத்தப்படும்.

4.3 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களை ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்

4.3.1 நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்தொன்றின் மூலம் காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த ரீதியிலான உரிமை முடிவுறுத்தப்படும்போது அல்லது நிதிச் சொத்தின் உரிமையின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை பொருண்மையுடையதாக மாற்றும் கொடுக்கல் வாங்கலொன்றின் ஊடாக ஒப்பந்த நிதிப்பாய்வுகளைப் பெறும் உரிமையை அது ஒப்படைக்கும்போது அல்லது உரிமையின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை பொருண்மையுடையதாக ஒப்படைக்கப்படல் அல்லது நிறுத்திவைத்தலை கம்பெனி மேற்கொள்ளாதபோது மற்றும் கம்பெனி நிதிசார் சொத்தொன்றின் கட்டுப்பாட்டை வைத்துக்கொள்ளாதபோது கம்பெனி நிதி சொத்தொன்றினை (அல்லது ஏற்புடையதாக அமையும் சந்தர்ப்பங்களில் நிதி ரீதியான சொத்தொன்றின் பகுதியினை) ஏற்பிசைவிலிருந்து விலக்கும்.

சொத்தின் முன்கொண்டு செல்லும் பெறுமதி (அல்லது சொத்தின் ஏற்பிசைவிலிருந்து விலக்கும் பகுதியுடன் தொடர்புடைய முன்கொண்டு செல்லும் பெறுமதி) மற்றும் பெறப்பட்டுள்ள கைம்மாறுகளின் மொத்தம் (புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட புதிய சொத்துக்களிலிருந்து புதிதாக பொறுப்பேற்கப்படும் பொறுப்புக்களை கழித்ததன் பின்னர் அது உட்பட) என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு மற்றும் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யபடும் திரட்டிய இலாபம்/நட்டம், நிதிச் சொத்தொன்றை ஏற்பிசைவிலிருந்து விலக்கும்போது இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஆயினும், ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்படும் உரிமையாண்மை முதலீட்டுப் பிணையங்களுடன் ஏற்புடையதாக ஏற்பிசைவு செய்யப்படும் திரட்டிய இலாபம்/நட்டம், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய ஏற்பிசைவிலிருந்து விலக்கும்போது இலாபம் அல்லது நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்பட மாட்டாது.

கம்பனியினால் உருவாக்கப்படும் அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள, ஏற்பிசைவிலிருந்து விலக்குவதற்காக தகைமை பெறும் ஒப்படைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களுடன் தொடர்புடைய எவ்வகையிலான உரிமையும் இருப்பின் அது வேறான சொத்து அல்லது பொறுப்பாக ஏற்பிசைவு செய்யபடும்.

நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யபடும் சொத்துக்களை மாற்றுவதற்காக கம்பெனி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டாலும் மாற்றப்படும் சொத்துக்களில் அல்லது அதன் ஒரு பகுதியில் அனைத்து அல்லது குறிப்பிடத்தக்களவு அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை தடுத்துவைத்தல் மேற்கொள்ளப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது மாற்றப்படும் சொத்துக்களின் ஏற்பிசைவு விலக்கப்படடாட்டாது.

சொத்துக்கள் மூன்றாம் தரப்பொன்றுக்கு மாற்றப்படும் சொத்துக்களின் சம கால மொத்த ஈட்டல்கள் பரிமாறப்படும் பிரகாரம் விற்பனையை மேற்கொள்ளும்போது அது விற்பனை மற்றும் மீள் கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலொன்றுடன் சமமான வகையில் பாதுகாக்கப்பட்ட நிதிசார் கொடுக்கல்வாங்கலொன்றாக கணக்கு வைக்கப்படும். அதற்கான காரணம், கம்பெனியால் அந்த சொத்துக்களின் உரிமையின் அனைத்து அல்லது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை தக்க வைத்துக்கொள்வதாகும்.

கம்பனியினால் சொத்தொன்றின் ஊடாக காசுப் பாய்ச்சலொன்றைப் பெற்றக்கொள்வதற்கான தனது உரிமையை ஒப்படைக்கும்போது அல்லது ஒப்படைப்பதற்கான ஏற்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் சொத்தொன்றின் குறிப்பிடத்தக்களவு அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை ஒப்படைத்தல் அல்லது தக்கவைத்துக்கொள்ளல் மேற்கொள்ளப்படாமை அல்லது சொத்தை நிர்வகிக்கும் அலுவல் ஒப்படைக்கப்பட்டிராதபோது சொத்து சம்பந்தமாக கம்பெனியின் தொடர்ந்தேர்ச்சியான தொடர்பு காணப்படும் வரை அந்த சொத்து ஏற்பிசைவு செய்யப்படும். அச் சந்தர்ப்பத்தில் கம்பெனியினால் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள்

ஏற்பிசைவு செய்யப்படும். கம்பெனியினால் தக்கவைத்துக்கொள்ளப்படும் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படும் அடிப்படையில் உரிமை மாற்றம் செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் அளவீடு செய்யப்படும்.

4.3.2 நிதிப் பொறுப்புக்கள்

நிதிப் பொறுப்பொன்றின் ஒப்பந்தப் பொறுப்பை நிறைவேற்றும்போது அல்லது இரத்துச் செய்யும்போது அல்லது குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததன் பின்னர் கம்பெனி நிதிப் பொறுப்பை ஏற்பிசைவிலிருந்து விலக்கும்.

4.3.3 நிதிச் சாதனங்களை எதிரீடு செய்தல்

இனங்காணப்பட்ட நிதிப் பெறுமதிகளை எதிரீடு செய்வதற்கு தற்போது செயல்வலுப்பெறச் செய்ய முடியுமான சட்ட ரீதியிலான உரிமையொன்று இருப்பின் மற்றும் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது கைத்தேறியதாக்கிக் கொள்வதற்கு மற்றும் அதற்கு இணையான வகையில் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு விரும்பினால் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களை எதிரீடு செய்து அதன் தேறிய பெறுமதி நிதி நிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும்.

வருமானம் மற்றும் செலவுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் ஊடாக அனுமதி வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அல்லது கம்பெனியின் வர்த்தக நடவடிக்கைகள் போன்ற சமமான விதத்திலான கொடுக்கல்வாங்கல்களின் பெறுபேறாக அமையும் இலாபம் மற்றும் நட்டத்திற்கு மாத்திரம் தேறிய அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றன.

5. பொறுப்புக்களும் நிதி ஏற்பாடுகளும்

5.1 பொறுப்புக்கள்

5.1.1 ஓய்வூதிய அனுகூலங்களுக்கான பொறுப்பு

5.1.2 வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் - ஓய்வுப் பணிக்கொடை

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அனைத்து ஊழியர்களுக்கும் முதலாம் வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் ஓய்வுப் பணிக்கொடைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஆயினும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் ஊழியர் ஒருவருக்கு 05 வருடங்கள் பூர்த்தியடைந்ததன் பின்னரே பொறுப்பு உருவாகின்றது. இந்தப் பொறுப்பு, சேவைக் காலத்திற்குரிய மொத்த வருடங்களுக்கும் மாதச் சம்பளத்தின் அரைவாசி என்ற வீதத்தின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகின்றது. இந்த விடயம் நிதி நிலைமைக் கூற்றில் ஊழியர் அனுகூலங்கள் பொறுப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பணிக்கொடை பொறுப்புக்காக வெளிவாரியாக நிதியீட்டல் மேற்கொள்ளப்படுவதில்லை.

5.1.3 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் குறிப்பிட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய ஏற்புடைய பங்களிப்பு நிதி ஏற்பாடுகளினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஊழியர்களை உள்ளடக்கிய வகையில் பங்களிப்புத் திட்டங்களுக்கு பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியம்

நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியரால் முறையே ஊழியரின் மாதச் சம்பளத்தின் 15% மற்றும் 10% என்ற ரீதியில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படுகின்றன.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஊழியரின் மாதச் சம்பளத்தின் 3% பங்களிப்பு மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

5.2 நிதி ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக நிகழ்கால சட்ட ரீதியான பொறுப்பொன்றை நிதியம் கொண்டிருக்கையில் அந்தப் பொறுப்பை தீர்ப்பதற்காக பொருளாதார அனுகூலங்களைக் கொண்ட வளங்கள் வெளியே செல்வதற்கான வாய்ப்பு நிலவுகையில் மற்றும் பொறுப்பின் அளவு சம்பந்தமாக நம்பகமான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியுமாக இருக்கையில் நிதி ஏற்பாடு ஏற்பிசைவு செய்யப்படும். கம்பெனியினால் சில அல்லது சகல நிதி ஏற்பாடுகளும் மீளளிப்புச் செய்யப்படுவது எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் உதாரணமாக காப்புறுதி ஒப்பந்மொன்றின் கீழ் எனில் மீளளிப்புச் செய்தல் வேறான சொத்தொன்றின் கீழ் ஏற்பிசைவு செய்யப்பட்டாலும் மீளளிப்புச் செய்தல் உண்மையிலேயே உறுதியாயின் மாத்திரமே அவ்வாறு மேற்கொள்ளப்படும். எந்த விதத்திலும் நிதி ஏற்பாட்டுடன் தொடர்பான செலவுகள், ஏதேனும் மீளளிப்பு இருப்பின் அதனை கழித்து வருமானக் கூற்றில் முன்வைக்கப்படுகின்றன.

பணத்தின் காலப் பெறுமதியின் தாக்கம் பொருண்மையாயின் பொறுப்புக்களுக்கான ஆபத்துக்களை ஏற்புடைய பிரகாரம் சுட்டிக்காட்டும் நடப்பு வரி வீதத்தினைப் பயன்படுத்தி நிதி ஏற்பாடு கழிவு செய்யப்படும். கழிவு பயன்படுத்திக்கொள்ளப்படும்போது செலவிடப்படும் காலத்திற்கமைய ஏற்படும் நிதி ஏற்பாட்டின் அதிகரிப்பு நிதிசார் கிரயமொன்றாக ஏற்பிசைவு செய்யப்படும்.

6. வருமானம் மற்றும் செலவுகள்

6.1 வருமானத்தை இனங்காணல்

2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 (SLFRS 15) ஊடாக, வருமானம் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 18 (LKAS 18) மற்றும் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தப் பணி தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 11 (LKAS 11) மற்றும் சர்வதேச நிதி அறிக்கையிடல் ஆய்வுக் குழுவின் நுகர்வோரின் ஆர்வம் சம்பந்தமான IFRIC 13 உம் உட்பட்ட வருமானத்தை இனங்காண்பதற்கான வழிகாட்டல்கள் மீளமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 (SLFRS 15) ஊடாக வருமானத்தை இனங்கண்டு கொள்வதெப்படி மற்றும் எந்தளவு என்ற ரீதியில் எந்தத் திகதிக்கு என்பது பற்றி நிர்ணயித்துக் கொள்வதற்காக முழுமையான மாதிரி சட்டகமொன்று வழங்கப்படும். எந்தத் திகதியில் வருமானம் இனங்கண்டுகொள்ளப்படுகின்றதெனவும் எந்தளவு பெறுமதியில் என்பதனை நிர்ணயித்துக்கொள்வதற்காக நிறுவனம் ஐந்து கட்டங்களைக் கொண்ட மாதிரியொன்றைப் பயன்படுத்திக்கொள்ளல் அவசியமாகும். எந்தத் திகதியில் வருமானம் இனங்காணப்படுகின்றது அல்லது நிறுவனத்திற்காக எதிர்பார்க்கப்படும் உரிமையின் கீழ் எந்தப் பெறுமதியில் நுகர்வோருக்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் நிர்வகிப்பை ஒப்படைத்தல் என்பது மற்றும் எந்தத் தினத்தில் என்பது நம்பிக்கை நிதியத்திற்கு பொருளாதார அனுகூலங்கள் வருவதனை எதிர்பார்க்கலாமென்பது மற்றும் செலுத்தல் மேற்கொள்ளப்படும் திகதி எதுவாயினும் வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அல்லது ஏற்க வேண்டிய சம்பந்தப்பட்ட செலவுகளை நம்பகமான விதத்தினாலான அளவீடு இந்த மாதிரியின் ஊடாக நிர்ணயிக்கப்படுகின்றது. ஒப்பந்த அடிப்படையிலான வரையறுக்கப்பட்ட செலுத்தல்

நிபந்தனைகளையும் கவனத்திற்கொண்டு பெறப்பட்டுள்ள மற்றும் பெற வேண்டிய மறுசீரமைப்புக்களுடன் தொடர்பான சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில் வருமானம் அளவீடு செய்யப்படுகின்றது.

6.1.1 வட்டி வருமானம்

தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படும் அனைத்து நிதிச் சாதனங்கள் மற்றும் அவற்றை விற்பனை செய்வதற்காக காணப்படுகின்ற வகைப்படுத்தப்பட்ட வட்டியைக் கொண்டுள்ள நிதிசார் சொத்துக்களின் மீதான வட்டி வருமானம் அல்லது செலவுகள் விளைவு வட்டி வீதத்தின் அடிப்படையிலேயே அறிக்கையிடப்படும். விளைவு வட்டி வீதம் என்பது நிதிச் சொத்துக்களில் அல்லது பொறுப்புக்களின் தேறிய முன்கொண்டு செல்லும் பெறுமதிக்கு நிதிசார் கருவிகளில் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் அல்லது குறுகிய காலப் பகுதிக்குள் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால பணச் செலுத்தல்கள் அல்லது கிடைப்பனவுகளுக்கமைய உண்மை நிலைமையில் கழிவு செய்யப்பட்ட வீதமாகும். வருமானக் கூற்றில் நிதி வருமானத்திற்குள் வட்டி வருமானம் உள்ளடக்கப்படும்.

6.1.2 ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

6.2 செலவுகள்

வர்த்தகத்தை பேணிச் செல்வதற்காக செலவு செய்யப்படும் அனைத்து செலவுகளும் ஆண்டிற்கான இலாபத்தைக் கணக்கிடும்போது வருமானத்திலிருந்து அறவிடப்படும். பழுதுபார்ப்புக்கள் மற்றும் புதுப்பித்தல்கள், குறிப்பிட்ட செலவு மேற்கொள்ளப்பட்ட ஆண்டுடன் தொடர்புடைய இலாபம் மற்றும் நட்டங்களில் அறவிடப்படும்.

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக		2022	2021
7 வருமானம்			
தேறிய வட்டி வருமானம்	**(குறிப்பு 7.1)**	1,771,795,864	1,157,299,900
அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபப் பங்கு		1,381,768,390	1,230,000,000
SLIIT இடமிருந்து கிடைத்த குத்தகைத் தொகை		25,000,000	25,000,000
		3,178,564,254	**2,412,299,900**

7.1 மஹபொல நம்பிக்கை நிதியம் முதலீட்டு வருமானம்

திறைசேரி முறிகள் - கூப்பன்	**(குறிப்பு 7.2)**	726,704,479	676,572,164
திறைசேரி முறிகள்- தவணை கழிக்கப்பட்டு மூலதன இலாபங்கள்		-	-
திறைசேரி உண்டியல்கள் - வட்டி	**(குறிப்பு 7.3)**	628,929,539	-
தொகுதிக் கடன் வட்டி		110,793,893	161,279,088
தடுத்து வைத்தல் வரியைக் கழித்து நிலையான வைப்புகள்		272,130,181	309,751,558
REPOவருமானம்		5,439,284	3,711,191
குறுகிய கால வருமானம்		27,418,223	5,862,119
சுவீப்பர் வருமானம்		380,263	123,779
		1,771,795,864	**1,157,299,900**

7.2 திறைசேரி முறிகள் கூப்பன்

திறைசேரி முறிகள் - கூப்பன்	726,704,479	676,572,164
	726,704,479	**676,572,164**

7.3 திறைசேரி உண்டியல் வட்டி வருமானம்

வருடத்தில் கிடைத்த வட்டி	60,687,700	-
வருடத்தில் கிடைக்க வேண்டிய வட்டி	659,965,785	-
மொத்த வட்டி வருமானம்	720,653,485	-
கழி		
NWSLஇன் ரீ பில் வட்டி வருமானம்	(91,723,946)	-
MTFஇன் ரீ பில் வட்டி வருமானம்	**628,929,539**	**-**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்கிறது

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக		2022	2021
8 நேரடியான செலவுகள்			
புலமைப் பரிசில் செலுத்தல்கள் -			
புலமைப் பரிசில் செலுத்தல்கள் - பல்கலைக்கழகங்கள்	**குறிப்பு 8.1**	1,288,347,209	984,512,850
புலமைப் பரிசில் செலுத்தல்கள் - தொழில்நுட்பக் கல்லூரிகள்		59,930,000	61,581,500
புலமைப் பரிசில் செலுத்தல்கள் - ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள்		17,866,350	6,861,250
புதிய புலமைப் பரிசில் வழங்கல் செலவுகள்		406,276	-
		1,366,549,835	**1,052,955,600**
8.1 புலமைப் பரிசில் செலுத்தல்கள் - பல்கலைக்கழகங்கள்			
புலமைப் பரிசில் செலுத்தல்கள் - பல்கலைக்கழகங்கள்		2,677,047,059	1,830,436,600
கழிக்கப்பட்டது: திறைசேரியின் பங்களிப்பு(மானியங்கள் ஆணைக்குழு ஊடாக)		(1,388,699,850)	(845,923,750)
		1,288,347,209	**984,512,850**
9 ஏனைய வருமானங்கள்			
பதவியணியினருக்கான கடன் வட்டி		65,065	54,744
நன்கொடைகள்		-	365,550
புலமைப் பரிசில்களைக் கழித்தல்		98,350	27,000
நானாவித வருமானங்கள்		38,000	87,320
ஏனைய வருமானம்		143,735	-
பணிக்கொடை நிலையான வைப்பு வருமானம்		127,649	-
		472,798	**534,614**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்கிறது

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	2022	2021
10 நிர்வாகச் செலவுகள்		
சம்பளம்	12,871,814	12,448,631
வருகை மற்றும் தொடர்பாடல் கொடுப்பனவு	1,566,500	1,184,000
மேலதிக நேர மற்றும் வாராந்தக் கொடுப்பனவு	245,314	583,285
ஊ.சே.நி.	1,471,291	1,174,779
ஊ.ந.பொ.நி.	297,693	255,561
மீதியான விடுமுறைக்கான கொடுப்பனவு மற்றும் பணியாளர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு	411,081	147,767
தேய்மானம்	31,052,906	31,369,306
மதிப்பிறக்கம்	247,061	220,205
தபால் கட்டணம் மற்றும் தொடர்பாடல்	37,615	39,540
பணிக்கொடை	-	321,961
நலனோம்பல் செலவுகள்	238,972	215,602
தொலைபேசி	647,612	804,320
கணக்காய்வுக் கட்டணம்	396,000	300,000
மொழிபெயர்ப்பு மற்றும் ஏனைய சேவைக் கட்டணங்கள்	122,765	539,130
பொறுப்பாளர் சபை மற்றும் முதலீட்டுக் கூட்டங்களுக்கான கட்டணங்கள்	275,000	362,500
எரிபொருள், போக்குவரத்து மற்றும் பிழைப்பூதியப் படி	467,157	1,803,219
நீர்	36,320	12,358
மின்சாரம்	534,232	496,017
சுத்திகரிப்புச் செலவுகள்	51,400	46,500
பொழுதுபோக்கு செலவுகள்	47,881	64,033
பாதுகாப்புக் கட்டணங்கள்	4,320	272,160
அச்சிடல் மற்றும் காகிதாதிகள்	784,815	1,860,663
பராமரிப்புச் செலவுகள் - அலுவலக உபகரணங்கள்	1,674,382	369,241
அலுவலக வாடகை- ஜே.ஆர்.ஜயவர்தன	3,623,400	3,623,400
முறைமைப் பராமரிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பச் செலவுகள்	210,288	190,950
நன்கொடைகள் - லலித் அத்துலத்முதலி மன்றம்	1,775,000	10,000
காப்புறுதி - பதவியணி	325,000	323,151
வர்த்தக விளம்பரச் செலவுகள்	663,093	1,927,784
சட்டக் கட்டணங்கள்	469,359	194,309
பங்களிப்புக் கட்டணங்கள்	83,060	24,590
நானாவிதக் கட்டணங்கள்	64,700	90,805
இணையத்தள அபிவிருத்திக் கிரயம்	-	-
வாகனங்களை வாடகைக்கு வழங்குதல்	1,262,283	1,717,200
வாகனப் பராமரிப்பு	939,314	477,317
பொறுப்பாளர் கட்டணங்கள் - இலங்கை வங்கி முதலீட்டு வங்கியிலிடல்	2,689,692	2,592,000
தொழில்வாண்மையாளர்களுக்கான கட்டணங்கள்	187,484	-
சுகாதார சேவைகள் மற்றும் பாதுகாப்புச் செலவுகள்	25,140	265,794
வருடாந்த அறிக்கைக்கான செலவுகள்	-	-
கருத்திட்டம் - மிஹிந்தலை	-	750,000
	65,799,943	**67,078,075**
11 நிதிக் கிரயம்		
வங்கிக் கட்டணங்கள்	71,020	71,025
கடன் வட்டி	-	-
	71,020	**71,025**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்கிறது

12 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

மொத்த முன்கொண்டு செல்லும் நிதி	2022.01.01ஆம் திகதியில் நிலுவை	சேர்த்தல்கள்	கையுதிர்வு	2022.12.31 திகதியில் நிலுவை
கட்டிடங்கள்	1,064,520,695	-	-	1,064,520,695
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	8,406,812	-	-	8,483,312
அலுவலக உபகரணங்கள்	3,949,935	-	-	3,898,935
கணினிப் பாகங்கள்	7,313,830	-	-	7,318,830
மோட்டார் வாகனங்கள்	16,190,000	-	-	16,190,000
தேய்மானம் செய்யக்கூடிய சொத்துக்களின் மொத்தப் பெறுமதி	**1,100,381,272**			**1,100,411,772**

திரண்ட தேய்மானம் மற்றும் சேதஇழப்பு	2022.01.01ஆம் திகதியில் நிலுவை	வருடத்திற்கான அறவிடல்	கையுதிர்வு	2022.12.31 திகதியில் நிலுவை
கட்டிடங்கள்	233,043,720	26,613,017	-	259,656,737
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	7,999,192	92,213	-	8,091,405
அலுவலக உபகரணங்கள்	1,856,520	522,970	-	2,379,490
கணினிப் பாகங்கள்	6,668,804	586,706	-	7,255,510
மோட்டார் வாகனங்கள்	8,844,619	3,238,000	-	12,082,619
மொத்த தேய்மானம்	**258,412,856**	**31,052,906**	**-**	**289,465,762**

தேறிய புத்தகப் பெறுமதி	As at 31.12.2021			As at 31.12.2022
கட்டிடங்கள்	831,476,975			804,863,958
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்	407,620			391,907
அலுவலக உபகரணங்கள்	2,093,415			1,519,445
கணினிப் பாகங்கள்	645,026			63,320
மோட்டார் வாகனங்கள்	7,345,381			4,107,381
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த முன்கொண்டு செல்லும் பெறுமதி	**841,968,416**			**810,946,010**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

13 அருவச் சொத்துக்கள்

மொத்த முன்னெடுத்துச் செல்லும் தொகை	2022.01.01 இல் நிலுவை	சேர்த்தல்கள்	கையுதிர்வுகள்	2022.12.31இல் நிலுவை
கணினி மென்பொருள்	177,000	-	-	177,000
மஹபொல இணையத்தளம்	775,000	-	-	775,000
MS Office -2019	283,306	-	-	283,306
தேய்மானம் செய்யக்கூடிய சொத்துக்களின் மொத்தப் பெறுமதி	**1,235,306**	**-**	**-**	**1,235,306**

திரண்ட தேய்மானம் மற்றும் சேத இழப்பு	2022.01.01 இல் நிலுவை	வருடத்திற்கான அறவிடல்	கையுதிர்வுகள்	2022.12.31இல் நிலுவை
கணினி மென்பொருள்	105,618	35,400	-	141,018
மஹபொல இணையத்தளம்	430,602	155,000	-	585,602
MS Office -2019	29,805	56,661	-	86,466
மொத்த தேய்மானம்	**566,025**	**247,061**	**-**	**813,086**

தேறிய புத்தக பெறுமதிகள்	31.12.2021 இல்	31.12.2022 இல்
கணினி மென்பொருள்	71,382	35,982
மஹபொல இணையத்தளம்	344,398	189,398
MS Office -2019	253,501	196,839
அருவச் சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதி	**669,280**	**422,219**

14 முதலீட்டு சொத்துக்கள்	**2022**	**2021**
இறையிலி காணி(மாலம்பே - SLIIT இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.)	12,460,179	12,460,179
குத்தகைக் காணி(மில்லேவ)	340,200,000	340,200,000
	352,660,179	**352,660,179**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	2022	2021
15 துணைக் கம்பெனிகளில் முதலீடு		
நெட்வெல்த் கம்பெனி *	985,000,000	985,000,000
	985,000,000	**985,000,000**

*நெஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிடெட் (NWCL) மஹபொல நம்பிக்கை நிதியத்தின் முழுமையான ஒன்றிணைந்த நிறுவனமாக தாபிக்கப்பட்டுள்ளது.

16 ஏனை ஏனைய முதலீடுகள்		
அபிவிருத்தி லொத்தர் சபையில் மூலதன முதலீடு	2,200,000	2,200,000
	2,200,000	**2,200,000**
17 நிதிச் சொத்துக்கள்		
FVTOCIஇன் நிதிச் சொத்துக்கள்		
திறைசேரி முறிகள் குறிப்பு	6,208,728,828	7,992,639,179
கழிவுகள்	-	-
நிதிச் சொத்துக்கள் காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில்		
திறைசேரி உண்டியல்கள்	5,336,408,950	-
தொகுதிக் கடன்	375,000,000	1,075,000,000
நிலையான வைப்புகள்	500,000,000	3,760,000,000
FVPLநிதிச் சொத்துக்கள்		
REPO	-	134,000,000
BOC- சுவீப்பர் கணக்கு -4079	1,328,206	1,328,206
	12,421,465,984	**12,962,967,385**
17.1 திறைசேரி முறிகள்		
டிசெம்பர் 31 இல் நிலுவை	**7,992,639,179**	**8,161,435,839**
வருடத்தில் சேர்த்தல்கள்	477,536,000	-
வருடத்தில் இனங்காணப்பட்ட வட்டி	726,704,479	-
வருடத்தில் வர்த்தகம்	(517,417,000)	-
கிடைத்த கூப்பன்கள்	(795,550,286)	-
கடந்த வருடத்தில் விற்பனை செய்யப்பட்ட தி.உண்டியல்களுக்கான சீராக்கல்	(56,886,902)	-
	7,827,025,470	**8,161,435,839**
விற்பனை செய்யப்பட்ட கடன் தவணைகளுக்கான சீர்மதிப்புப் பெறுமதி	(2,661,815)	-
வருடத்தில் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்கள்	(1,615,634,827)	(168,796,660)
நியாயமான மதிப்பீட்டில் கடன் சாதனங்கள் மீதான நிகர இலாபம்/(நட்டம்)	**(1,618,296,642)**	**(168,796,660)**
டிசெம்பர் 31 இல் சீர்மதிப்புப் பெறுமதி	**6,208,728,828**	**7,992,639,179**
18 ஏனைய சொத்துக்கள்		
ஓய்வூதிய அனுகூல சொத்துக்கள்(நிலையான வைப்புகள்)	-	3,685,913
காகிதாதிகள்	304,761	279,341
வாடகை வைப்புகள் ஜயவர்தன நிலையம்	1,811,700	1,811,700
சதொச வாடகை வைப்புகள்	348,810	348,810
	2,465,271	**6,125,764**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	2022	2021
19 முற்பணம் மற்றும் முன்கூட்டிய செலுத்தல்கள்		
பதவியணியினருக்கான கடன் மற்றும் முற்பணம்	1,845,504	1,477,096
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	306,000	399,000
மருத்துவ காப்புறுதிக்கான முன்கூட்டிய செலுத்தல்	61,858	61,858
மின்பிறப்பாக்கி பொருத்துவதற்கான முன்கூட்டிய செலுத்தல்	193,204	-
	2,406,567	**1,937,954**
20 ஏனைய வருமதிகள்		
ப.மா.ஆ.விலிருந்து கிடைக்க வேண்டிய பணம்(திறைசேரி பங்களிப்பு)	429,337,500	49,807,900
அ.லொ.ச. இலாபப் பங்கு வருமதிகள்	266,790,550	219,503,210
வரவேண்டிய நிலையான வைப்பு வட்டி	62,089,041	64,887,973
தொகுதிக் கடன் வட்டி வருமதி	24,854,075	42,799,052
பணிக்கொடை நிலையான வைப்பு வட்டி வருமதிகள்	71,194	71,194
கிடைக்க வேண்டிய திறை.உண்டியல் வட்டி- MTF	568,241,839	-
கிடைக்க வேண்டிய திறை.உண்டியல் வட்டி- NWSL	91,723,946	-
புலமைப் பரிசு செலுத்தல் வருமதிகள்	25,000	25,000
வருமதிகள் - வர்த்தக அமைச்சு	1,021,450	772,000
	1,444,154,595	**377,866,328**
வாகனக் காப்புறுதி வருமதிகள்	40,038	-
கிடைக்க வேண்டிய காப்புறுதித் தவணைகள்	11,795	9,893
	1,444,206,429	**377,876,221**
21 காசும் காசுக்குச் சமமானவைகளும்		
இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு -1791 குறிப்பு 21.1	64,040,675	853,373
இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு -83302834	494,609	206,090
இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு -83867162	51,281	866,863
	64,586,566	**1,926,327**
குறிப்பு 21.1 இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு -1791		
இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு -2022.12.31	(159,325)	-
இலங்கை வங்கி - குறகியகால முதலீடு -2022.12.31	64,200,000	-
	64,040,675	
22 ஓய்வூதிய அனுகூலப் பொறுப்பு		
சனவரி 01 இல் நிலுவை	**4,905,475**	**4,587,845**
பணிக்கொடை நிலையான வைப்பு வட்டி வருமானம்	366,333	194,189
இலாபம் மற்றும் நட்டங்களின் இனங்காணப்பட்ட செலவுகள்	-	123,441
டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை	**5,271,808**	**4,905,475**

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்கிறது

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக	2022	2021

23 அட்டுறு மற்றும் ஏனைய செலுத்தல்கள்

செலுத்த வேண்டிய புலமைப் பரிசில்கள் - பல்கலைக்கழகங்கள்	494,332,300	50,715,900
செலுத்த வேண்டிய புலமைப் பரிசில்கள் - தொழில்நுட்பக் கல்லூரிகள்	10,487,500	7,313,600
செலுத்த வேண்டிய புலமைப் பரிசில்கள் - உயர் கல்வி நிறுவனங்கள்	10,647,800	-
தடுத்து வைத்தல் கணக்கு	1,547,409	1,547,409
தடுத்து வைத்தல் கணக்கு - புனித ஏன்ஸ் கல்லூரி	382,417	382,417
தடுத்து வைத்தல் கணக்கு - சேர் ஜோன் கொத்தலாவல கல்லூரி	243,503	243,502
தடுத்து வைத்தல் எம்பிலிப்பிட்டி நீச்சல் தடாகத்தின் செலவுகள்	585,449	585,449
செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள்	348,000	348,000
செலுத்த வேண்டிய ப.மா.ஆ.கு.அளிப்புகள்	68,600	68,600
சிலிப் ரிட்டன் - பல்கலைக்கழகங்கள்	2,492,903	2,260,450
சிலிப் ரிட்டன் - ATI	2,070,000	23,328
சிலிப் ரிட்டன - HEI	139,350	30,854
மெய்நிகர் கூட்டங்கள் நடத்தப்படுதல்	-	27,430
தொலைபேசிக் கட்டணங்கள்	52,591	91,500
மேலதிக நேர செலுத்தல்களுக்கான பணம்	1,238	1,074,097
வருகைக்கான கொடுப்பனவுக்காக செலுத்த வேண்டிய பணம்	130,000	111,250
சம்பளத்திற்காக செலுத்த வேண்டிய பணம்	78,000	-
பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகள்	1,074,097	475,700
பெறப்படாத லீவுக்காக செலுத்த வேண்டியவைகள்	411,081	-
செலுத்த வேண்டிய புலமைப் பரிசில் கொடுப்பனவுகள்	29,800	432,000
பாதுகாப்புக் கட்டணங்கள்	235,897	-
கட்டட வாடகைக்கான ஏற்பாடுகள்	1,207,800	-
மின்சாரம் மற்றும் நீர்	-	51,378
	526,578,821	**65,801,507**

24 மூலதன மற்றும் ஏனைய கடப்பாடுகள்

2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அளவுசார் மூலதனச் செலவுகள் அல்லது வேறு நிதி கடப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை.

25 அறிக்கையிடல் கால எல்லையின் பின்னரான நிகழ்வுகள்

டிசெம்பர் 31 அறிக்கையிடல் திகதி மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட திகதிக்கு இடையில் இந்த நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்குத் தேவையான நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

26 சார்ந்த பொறுப்புகள்

2022 டிசெம்பர் 31 இல் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்கள்/அல்லது வெளிப்படுத்தல்கள் தேவையான அளவு சார்ந்த பொறுப்புகள் எதுவும் இருக்கவில்லை.

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்கிறது

27 தொடர்புடைய தரப்புகளுக்கான வெளிப்படுத்தல்கள்

நம்பிக்கை நிதியம் சார்ந்த தரப்பினர்களுக்கான நிறுவனங்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ குழக்கள் உள்ளடங்கும்.

தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

சாதாரண வணிக விதிகளின் கீழ் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் உரிய தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கம்பெனியின் /நிறுவனத்தின் பெயர்	தொடர்பு	கொடுக்கல் வாங்கல்களின் தன்மை	கொடுக்கல் வாங்கலின் பெறுமதி	கிடைக்க வேண்டிய.்.செலுத்த வேண்டிய தொகை
அபிவிருத்தி லொத்தர் சபை	சாதாரண பணிப்பாளர்	இலாபப் பங்கு	1,381,768,390	266,790,550
நெட்வெல்த் சிக்கியுரிட்டீஸ் கம்பெனி	சாதாரண பணிப்பாளர்	நிலையான சொத்துக்களைNWSLஇடம் கொள்வனவு செய்தல்	(148,950)	-
	சாதாரண பணிப்பாளர்	நிதி பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் NWSL இலிருந்து MTFக்கு கிடைத்த நிதி	(850,000,000)	-
		முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம்	(126,500,344)	-
		திறைசேரி உண்டியல்களில் முதலீடு	593,798,500	
		நிதி மாற்றப்பட்டது NWSL	396,828,400	
		நிலையான வைப்புகளில் முதல் மற்றும் காலமுதிர்ச்சி	450,000,000 (450,000,000)	

28 நிதி சாதனங்கள் மற்றும் இடர் முகாமைத்துவம்

நிதி நிலை பற்றிய கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ள ஒவ்வொரு தொகுதியின் நிதிச் சாதனங்களின் கணக்கீட்டு வகைப்படுத்தல் மற்றும் அவற்றின் முன்கொண்டு செல்லும் பெறுமதி கீழே தரப்பட்டுள்ளது.

நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதி	குறிப்பு	2022	2021
ஏனைய விபரமான வருமான நிதிச் சொத்துக்கள் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி			
திறைசேரி முறிகள்	**17**	**6,208,728,828**	**7,992,639,179**

FVTOCI முதலீடுகள் 2022 டிசெம்பர் 31 இல் சீர்மதிப்புப் பெறுமதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிச் சொத்துக்களின் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி			
REPO	**17**	-	134,000,000
இலங்கை வங்கி - சுவீப்பர் கணக்கு -4079	**17**	1,328,206	1,328,206
		1,328,206	**135,328,206**
காலத் தேய்மானம் செய்யப்பட்ட கிரயம்			
திறைசேரி உண்டியல்கள்	**17**	5,336,408,950	-
தொகுதிக் கடன்	**17**	375,000,000	1,075,000,000
நிலையான வைப்புகள்	**17**	500,000,000	3,760,000,000
ஏனைய வருமதிகள்	**20**	1,444,154,595	381,362,673
காசும் காசுக்குச் சமமானவைகளும்	**21**	64,586,566	1,926,327
		7,720,150,111	**5,218,289,000**

நிறுவனக் கடன் விளைவு வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளதோடு காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தின்கீழ் பெயரிடப்பட்ட ஏனைய நிதிச் சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் சீரமதிப்புப் பெறுமதிக்கு அண்ணளவானது என்பதால் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் வெளிப்படுத்தப்படும்.

நிதிசார் பொறுப்புகள்			
ஏனைய நிதிசார் பொறுப்புகள்			
ஏனைய செலுத்த வேண்டியவைகள்	**23**	**518,226,378**	**60,788,277**

விளைவு வட்டி முறையைப் பயன்படுத்தி நிதிசார் பொறுப்புகள் காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிவிபரங்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.